JULY 10, 2020
FRIDAY
VOL: 006/045
RS. 10.00
LATE CITY ★

தேர்தல் சிறப்பிதழ் Rs.10

Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk



2,000 ஆண்டுகள் பழைமையான கோணேஸ்வரம் கோவில் பற்றி


## ‘வாயுபுராணத்திலும் பாடப்பட்டுள்ளது’

திருகோணமலையில் அமைந்துள்ள திருக்கோணேஸ்வரம் கோவில் பற்றியும் அதன் மூர்த்தி, தலம், தீர்த்தம் பற்றியும், பரதகண்டம் வரையில் புகழ் பரவியிருந்ததென்று, இலங்கையின் வரலாற்றுத்துறை தகைசார் பேராசிரியர் சி.பத்மநாதன்,

தொடர்ச்சி P2

பௌத்தம் வருமுன் இலங்கையில்

## ‘இந்து மதம் இருந்தமைக்கு சான்றுகள் இல்லை’



மேனகா மூக்காண்டி

“இலங்கைக்கு பௌத்த மதம் வருவதற்கு முன்னர் இந்து மதம் வந்தமைக்கான எந்தச் சான்றுகளும் இல்லை.

தொடர்ச்சி P2

திருக்கோணேஸ்வரம் விவகாரம்;

## ‘இந்து மதமே பழைமையானது’


மேனகா மூக்காண்டி



தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான உறவு, மிகப் பழைமையானது. இந்து மதம்தான், மிகப் பழைமையான மதமாகும். அதன் பின்னர்தான், பௌத்த மதம் உருவானது என்று,

தொடர்ச்சி P2

# 2ஆவது அலை பேரச்சம்..?




- ஒரே நாளில் 60 பேருக்கு கொரோனா தொற்று உறுதியானது
- 2,154 பேராக, தொற்று நோயாளர்கள் அதிகரிப்பு
- கந்தகாடு குறித்து, அதிகாரிகள் அவதானம்

நேற்றைய தினத்தில் மாத்திரம், கொரோனா தொற்று நோயாளர்கள் 60 பேர் இனங்காணப்பட்ட நிலையில், இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை, 2,154ஆக அதிகரித்துள்ளது.

வெலிகந்த - கந்தகாடு போதைப்பொருள் புனர்வாழ்வு மத்திய நிலையத்திலிருக்கும் கைதிகள் மற்றும் அலுவலக அலுவலர்கள் உள்ளடங்களாக 450 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையின் போது, அவர்களில் 56 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது என, சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

மாரவில பெண்ணுக்கு

## கொரோனா எவ்வாறு பரவியது?

கந்தகாடு போதைப்பொருள் புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் ஆலோசகராகக் கடமையாற்றும் 27 வயதான யுவதியொருவர், ஜூலை 3ஆம் திகதியன்று விடுமுறையில் வீட்டுக்குச் சென்றிருந்த போது, அவருக்குத் திடீரென இருமலும் காய்ச்சலும் ஏற்பட்டுள்ளது.

நாத்தாண்டியா - கொட்டாரமுல்ல பிரதேசத்திலுள்ள தன்னுடைய வீட்டில் தங்கியிருந்த அந்தப் பெண், மாரவில வைத்தியசாலையில் பிசிஆர் பரிசோதனையை மேற்கொண்டிருந்த போதே, அவருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளமை இனங்காணப்பட்டது என, புத்தளம் மாவட்டச் சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் தினுஷா பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## ‘குடிசைகளை ஒழித்தது போல, போதைப்பொருளை ஒழிக்கவும்’

### மட்டக்குளி மக்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள்

குடிசை வாழ்க்கையினால் அவதியுற்றிருந்த தமக்கு, தொடர்மாடி வீடுகளைப் பெற்றுத்தந்தது போல, போதைப்பொருளையும் நாட்டிலிருந்து முற்றாக ஒழித்து, பிள்ளைகளின் எதிர்காலத்தைக் காப்பாற்றித் தருமாறு, மட்டக்குளி மக்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் கீழ், கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, நேற்று (09) நடத்தப்பட்ட மக்கள் சந்திப்புகள் பலவற்றில், ஜனாதிபதி பங்கேற்றிருந்தார்.

இதன்போது, மக்களின் குறை, நிறைகளைக் கேட்டறிந்து கொண்ட ஜனாதிபதி, 2015இல் இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்தியை மீண்டும் ஆரம்பிப்பதாக உறுதியளித்துள்ளார்.

போதைப்பொருள் பாவனை காரணமாக, பாடசாலை மாணவர்கள் முதல் பெரியோர்கள் வரை, பல உயிர்கள் பலியாகின்றன. இது, தாம் முகங்கொடுக்கும் பாரிய பிரச்சினையாக உள்ளதெனத் தெரிவித்த மட்டக்குளி பிரதேச மக்கள், ஜனாதிபதியின் மேல் தாம் பலமான நம்பிக்கை வைத்திருப்பதாகவும் தெரிவித்தனர்.



## ஒரு பவுண் தங்கம் ஒரு இலட்சம் ரூபாய்

- விமானச் சேவை மீள ஆரம்பித்தவுடன் தங்க விலையில் ஸ்திரத்தன்மை ஏற்படும்

இலங்கையின் வரலாற்றில், ஒரு பவுண் தங்கத்தின் விலை ஒரு இலட்சம் ரூபாய் வரையிலும் அதிகரித்துள்ளது எனத் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## ‘முஸ்லிம்களை விற்றுப்பிழைத்த முஸ்லிம் தலைவர்கள் இருந்தனர்’



- சுதந்திரக் கட்சி விரட்டிவிட்டதன் பின்னரே, அந்த உறுப்பினர்கள் புதிய வீடொன்றைக் கட்டினர்
- ஜனநாயகத்தை இல்லாமற் செய்வதற்காக, முஸ்லிம் தலைவர்களின் ஒத்துழைப்பும் கிடைத்தது

கடந்த காலங்களில் முஸ்லிம்களை விற்று வளர்ந்த முஸ்லிம் தலைவர்கள் இருந்தனர் எனத் தெரிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இது பெரிய பயங்கரமான அனுகுமுறையாகும் என்றார்.

தொடர்ச்சி P2

## ‘சமூகப் பரவலுக்கு வாய்ப்பில்லை’



கந்தகாடு புனர்வாழ்வளிப்பு முகாமில் கண்டறியப்பட்ட, வெலிக்கடை விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதிக்கு தொற்றியுள்ள கொரோனா வைரஸ்,

தொடர்ச்சி P2

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்:

## 10 மணிநேரங்களாக ரிஷாட்டிடம் விசாரணை

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியூதீன், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் நேற்றைய தினம், 10 மணிநேரம் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

தொடர்ச்சி P2



‘பயங்கரவாத செயற்பாடுகளுடன் எமக்குத் தொடர்பே இல்லை’

முழுச் செய்தி P5

## ‘கேட்ட கேள்விகளையே சி.ஐ.டியினர் கேட்டனர்’

### ரணில் தெரிவிப்பு: சேறுபூசும் செயற்பாடு என்றார்

அழகன் கனகராஜ்

நல்லாட்சி அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிவாரணங்கள் மீது கண்ணுக்குத் தெரியாத வகையில், இந்த அரசாங்கம் கைகளை வைத்துள்ளதெனத் தெரிவித்துள்ள ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அரசாங்கத்தின் இந்தச் செயற்பாடுகளுக்கு எதிராக, ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கு அமைப்புகள் சில தயாராகிவருகின்றனவென அறியமுடிகின்றது.

தொடர்ச்சி P2

## ‘முதல் 90 அலகுகளுக்கு 25 % கட்டணம் குறையும்’

### இறுதி முடிவு அடுத்தவாரம் என்கிறார் அமைச்சர் பந்துல

மகேஸ்வரி விஜயனந்தன்

ஊரடங்குச் சட்டம் அமலில் இருந்தபோது, மார்ச், ஏப்ரல், மே மாதங்களுக்கான மின்சாரப் பட்டியலில் முதல் 90 அலகுக்கான கட்டணத்தில் 25 சதவீதம் குறைப்பதற்கான யோசனையை அமைச்சர் மஹிந்த அமரவீர, அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தார் என அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

வாக்குப் பெட்டிகளை

## ‘பாதுகாப்பது எமது பொறுப்பு’

### தேர்தல் ஆணைக்குழு தவிசாளர் உறுதி



ஓகஸ்ட் 5ஆம் திகதி மாலை 5 மணிக்கு வாக்களிப்பு நிறைவடைந்த பின்னர், அனைத்து வாக்குப் பெட்டிகளும் வாக்கெண்ணும் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதோடு, அன்றிரவு முழுவதும் அப்பெட்டிகளைப் பாதுகாப்பது தங்களின் பொறுப்பென தேர்தல் ஆணைக்குழு தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ‘வாயுபுராணத்திலும் பாடப்பட்டுள்ளது’

ஐந்தாம் நூற்றாண்டில் பாடப்பட்ட வாயுபுராணத்திலும் இக்கோவில் பற்றிப் பாடப்பட்டுள்ளது என்றார்.

பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான திருகோணேஸ்வரம், 2000 வருடங்கள் பழைமையான கோவில் என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பிலான பேராசிரியரின் கருத்து, நேற்றைய தினம் வெளியிடப்பட்ட தமிழ்மிரர் பத்திரிகையின் முன்பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும், இரண்டாயிரம் ஆண்டுகள் பழைமையான என்ற விடயம், 200 ஆண்டுகள் பழைமையானது எனத் தவறுதலாகப் பிரசுரிக்கப்பட்டமைக்கு வருந்துகிறோம்.

## ‘இந்து மதம் இருந்தமைக்கு சான்றுகள் இல்லை’

வர்த்தகங்கள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்கான பயணங்களை மேற்கொண்ட இந்தியர்கள், இலங்கைக்கு சில பல சந்தர்ப்பங்களில் கரையொதுங்கியிருந்தனர். அவர்களில் சிலர், இலங்கையில் குடிகொண்டுள்ளனர். அவர்கள் இந்து மதத்தைத் தழுவியிருந்தார்கள் என்பதற்கான எந்தவோர் ஆதாரமும் இல்லை. கி.பி 5ஆம் நூற்றாண்டிருந்து, பௌத்த தர்மமே இலங்கையில் பின்பற்றப்பட்டு வருகிறது” என, எல்லாவல மேதனந்த தேரர் தெரிவித்தார்.

இலங்கையைப் பிரிப்பதற்காகவும் நாட்டுக்குள் இனப் பிரச்சினையைத் தோற்றுவிப்பதற்காகவும், தமிழ் அரசியல்வாதிகள் முன்வைத்த புனைகதைகளையே மக்கள் மத்தியில் நிலவுகின்றன என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், அநுராதபுர காலத்திலேயே, திருக்கோணேஸ்வரம் கோவில் நிர்மாணிக்கப்பட்டது. கோவில் அமைவதற்கு முன்னர் அவ்விடத்தில், கோகண்ண விகாரையே அமைந்திருந்தது. போர்த்துக்கேயர் ஆட்சியின் போது, அவ்விகாரை உடைத்தெறியப்பட்டது. போர்த்துக்கேயர் ஆட்சியின் பின்னர், அவரவர் விருப்பத்துக்கேற்ப, விகாரைகள் இருந்த இடங்களில், கோவில்களை நிர்மாணித்துக் கொண்டனர்” என்றார்.

“இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே அவ்விடத்திலிருந்து சிவலிங்கம், நந்திச் சிலை போன்றன கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள், பின்னர் புனைக்கப்பட்ட கதைகளாகும். கி.பி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், உலகில் சிவலிங்க பூஜைகள் இருக்கவே இல்லை” என்றும் அவர் கூறினார்.

## ‘இந்து மதமே பழைமையானது’

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

திருகோணமலையிலுள்ள திருக்கோணேஸ்வரம் கோவில் தொடர்பில் தற்போது எழுந்துள்ள சர்ச்சை தொடர்பில் கேட்ட போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில், தமிழ்மிரருக்கு தொடர்ந்துரைத்த அவர், வரலாறு, தொல்லியல், புராணம் என்பவை, மூன்று வெவ்வேறு விடயங்களாகும். எல்லாவல மேதானந்த தேரரைப் போன்றளவில், நான் ஒன்றும் தொல்லியல் நிபுணரல்லர். இராவணன் விடயத்தில் கூட, சிலர் அவர் குறித்து நம்புகின்ற அதேவேளை, மேலும் சிலர், இராவணன் என்றொருவர் இருந்ததை நம்புவதில்லை” என்றார்.

“அதேபோன்றுதான், கோணேஸ்வரம் பற்றிய வாதப்பிரதிவாதங்களும் உண்டு. அதற்கான சில ஆதாரங்களுடன் சிலர் வாதிடுவதும் உண்டு. கோகண்ண தீபம் என்றுதான் திருகோணமலையை அழைப்பார்கள். அங்கு இருந்த விகாரையைத்தான், கோகண்ண விகாரை என்று அழைக்கப்பட்டது. அந்த விகாரை அழிக்கப்பட்டதாகவும் அதிலிருந்த புத்தர் சிலையொன்று, தற்போது கோவில் இருக்கும் இடத்துக்கு அண்மித்த கடலிலிருந்து கண்டெடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதன் உண்மையை, தொல்லியல் ஆய்வுகள் மூலம்தான் அறிந்துகொள்ள முடியும்” என்றும் அவர் கூறினார்.

## ‘சமூகப் பரவலுக்கு வாய்ப்பில்லை’

சமூகத்தில் பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்தார்.

அதேபோல கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தின் ஊடாக, சமூகத்தில் பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை, புனர்வாழ்வளிப்பு முகாமிலிருந்து விடுமுறையில் சென்றிருந்த எட்டுப்பேரும் இனங்காணப்பட்டு, மத்தியநிலையத்து அழைக்கப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கொரோன தொற்றுக்குள் உள்ளான, அந்த முகாமைச் சேர்ந்த ஆலோசகரான பெண்ணின் பெற்றோர்கள் மற்றும் குடும்ப அங்கத்தவர்கள், சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களின் பீ.சி. ஆர் அறிக்கையும் பெற்றுகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## ‘முஸ்லிம்களை விற்றுப்பிழைத்த முஸ்லிம் தலைவர்கள் இருந்தனர்’

குருநாகல், ப்ளூ ஸ்கைப் ஹோட்டலில், முஸ்லிம் வர்த்தகர்கள் மற்றும் அறிஞர்கள் மத்தியில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், தங்களுடைய அரசாங்கத்திலும் அவ்வாறான முஸ்லிம் தலைவர்கள் இருந்தனர் என்றார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உருவாக்கம் தொடர்பில் அங்கு கருத்துரைத்த அவர், தனக்கு ஆதரவளித்த மக்கள் பிரதிநிதிகள் சிலரை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி விரட்டிவிட்டது. அதனால்தான், இவ்வாறானதொரு முடிவை எடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

“சுதந்திரக் கட்சி விரட்டிவிட்டதன் பின்னரே, அந்த உறுப்பினர்கள் புதிய வீடொன்றைக் கட்டினர். அதன்பின்னர், நடத்தப்பட்ட ஒவ்வொர தேர்தலிலும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன வெற்றியீட்டியது” என்றார்.

தேர்தலுக்கு அஞ்சியதால் ஐக்கிய தேசிய கட்சி, கடந்த காலங்களில் தேர்தல்களை நடத்தவில்லையெனத் தெரிவித்த அவர், மக்களின் ஜனநாயகத்தை இல்லாமற் செய்வதற்காக, முஸ்லிம் தலைவர்களின் ஒத்துழைப்பும் ஐக்கிய தேசிய கட்சிக்கு கிடைத்தது என்றார்.

தற்போதைய அரசமைப்பில் சில ஷரத்துகளால் மக்களிடையே பிரிவினை ஏற்பட்டுள்ளது. ஆகையால், மக்கள் ஒன்றிணைத்தல் இயலாமற் உள்ளதெனத் தெரிவித்த அவர், அரசமைப்பை மாற்றுவதற்காக சகலரும் ஒன்றிணைந்து செயற்பாடுமாறு அழைப்பு விடுத்தார்.

“சிறிகொத்தாவை பாதுகாப்பதற்காக மட்டுமே கவனம் செலுத்தியுள்ள ஐ.தே.க, நாட்டுப் பிரச்சினையை சிறிகொத்தாவுக்குள் மட்டுப்படுத்துவது கண்டிக்கத்து” என்றார்.

## கொரோனா எவ்வாறு பரவியது?

அத்துடன், அப்பெண்ணுக்கு அருகிலிருந்தவர்கள் இனங்காணப்பட்டு தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர். கந்தகாடு முகாமில் பணியிலிருந்த அந்தப் பெண், கெப் ரக வாகனத்தில் பொலன்னறுவைக்கும் அங்கிருந்து குருநாகலுக்கும் சென்று, குருநாகல் - நீர்கொழும்பு வழித்தட பொதுப் போக்குவரத்துச் சேவை பஸ்ஸில், தங்கொட்டுவ பகுதிக்குச் சென்றுள்ளார்

அங்கிருந்து இன்னுமொரு பஸ்ஸினூடாக, நாத்தாண்டியாவுக்குச் சென்றுள்ளார். எவ்வாறெனினும், முகக் கவசத்தை அணிந்துகொண்டே அவர் பஸ்களில் பயணித்துள்ளார் என, வைத்தியர் தினுஷா பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

## 10 மணிநேரங்களாக...

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு நேற்று (09) முற்பகல் 10.30 மணிக்குச் சென்றிருந்த அவர், அங்கிருந்து இரவு 8 மணியளவிலேயே வெளியேறியுள்ளார்.

2019 ஏப்ரல் 21ஆம் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பிலேயே, அவரிடம் முதன்முறையாக வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்கள் தொடர்பில் தன்னைக் கைதுசெய்வதற்குத் தயாராகி வருகின்றனர் என்றும் அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு இடைகாலத் தடையுத்தரவைப் பிறப்பிக்குமாறு, உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றையும் ரிஷாட் பதியூதீன் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 2ஆவது அலை பேரச்சம்?

கந்தகாடு போதைப்பொருள் புனர்வாழ்வு மத்திய நிலையத்தில், 3 மாதங்களாகப் புனர்வாழ்வளிக்கப்பட்டு வரும் வெலிக்கடை சிறைச்சாலைக் கைதியொருவருக்கு கொரோனா தொற்றியிருந்தமை உறுதியான நிலையில், கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்திலுள்ள கைதிகளும் அலுவலகர்களும், பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.




இதேவேளை, மாரவில பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவரும், கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளார். அத்துடன், பங்களாதேஷிலிருந்து வருகைதந்து தனிமைப்படுத்தப் பட்டிருந்த ஒருவரும் பூனேவ தனிமைப்படுத்தல் முகாமிலிருந்த இராணுவ வீரரும், கட்டாரிலிருந்து வருகைதந்து தனிமைப் படுத்தப்பட்டிருந்த ஒருவருமாக, மொத்தம் 60பேர், நேற்றைய தினம் தொற்றுக்குள்ளாகி உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## ஒரு பவுண் தங்கம் ஒரு இலட்சம் ரூபாய்

தங்கத்தின் கையிருப்புக் குறைந்துள்ளமையால், 24 கரட் பவுண் ஒன்றின் விலை, ஒரு இலட்சம் ரூபாய் வரையிலும் அதிகரித்துள்ளதென, தங்க நிர்ணயம் மற்றும் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் இந்திகா பண்டாரா தெரிவித்தார்.

22 கரட் ஒருபவுண் தங்கத்தின் தற்போதைய விலை, 93 ஆயிரம் ரூபாயாக நேற்று முன்தினம் (08) இருந்தது. நேற்று மட்டும் 6,000 ரூபாயால் அதிகரித்துள்ளது.

“கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக, நாட்டுக்குள் தங்கம் கொண்டுவருதல் சீர்குலைந்துள்ளது. விமானச் சேவைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், தங்க விலைகளில் ஸ்திரத்தன்மை ஏற்படும்” என்றார்.

## ‘கேட்ட கேள்விகளையே சி.ஐ.டியினர் கேட்டனர்’

குறிப்பாக, சிரேஷ்ட பிரஜைகளுக்கான நிலையான வைப்பு வட்டிவீதத்தில் அரசாங்கம் கையை வைத்துள்ளமையால், சிரேஷ்ட பிரஜைகளும் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இணைந்துகொள்ள உள்ளனர் என அந்தத் தகவல்கள் தெரிவித்தன எனக் கூறியுள்ளார்.

கொழும்பிலுள்ள தன்னுடைய வீட்டில், வாராந்தம் புதன்கிழமைகளில் இடம்பெறும், ஐ.தே.கவின் சிரேஷ்ட தலைவர்களுடனான சந்திப்பின் போதே, ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரங்களை முன்னெடுப்பது தொடர்பிலும் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பிலும், அந்த சந்திப்பின் போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், சி.ஐ.டியினர் விசாரித்தமை குறித்தும் ரணிலிடம் கேட்டறிந்துகொண்டனர்.

இதேவேளை, 2011 உலகக்கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டியின் போது, ஆட்டநிர்ணய சதி இடம்பெற்றுள்ளதாக, அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின் குற்றச்சாட்டு தொடர்பிலும் ரணில் விக்கிரமசிங்க கருத்துரைத்துள்ளார்.

## ‘பாதுகாப்பது எமது பொறுப்பு’

இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுடன் நேற்று (09) காலை, தேர்தல் காரியாலயத்தில் நடைபெற்ற சந்திப்பிலேயே தவிசாளர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு மேலும் கூறுகையில்,

‘தேர்தல் கடமைகளில் இராணுவத்தையும் கடற்படையையும் தேவைக்கேற்பவே பயன்படுத்துவோம். தீவுப் பகுதிகளில் வாக்குப் பெட்டிகளைக் கொண்டுசெல்வதற்காகவே அவர்களின் உதவி தேவைப்படும். ஏனைய அனைத்துக்கும் பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் மாத்திரமே பயன்படுத்தப்படுவார்கள்’ என மஹிந்த தேசப்பிரிய கூறினார்.

‘வாக்குப் பெட்டிகள் அனைத்தும் முத்திரையிடப்பட்டு, வாக்கெண்ணும் நிலையங்களில் பாதுகாப்பாக வைக்கப்படும். பாதுகாப்பு அறையும் முத்திரையிடப்படும். இவற்றைப் பாதுகாப்பதற்காக பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இவர்கள் தவிர, ஒவ்வொரு கட்சிகளிலிருந்தும் 10பேர் வீதம், சுழற்சிமுறையில் கண்காணிப்பில் ஈடுபட முடியும்’ எனவும் அவர் தெளிவுபடுத்தினார்.

‘6ஆம் திகதி காலை 8 மணிக்கு வாக்கெண்ணும் பணிகள் ஆரம்பமாகியதும், அவற்றைக் கண்காணிப்பதற்காக ஒவ்வொரு கட்சிகளிலிருந்தும் இருவர் அனுமதிக்கப்படுவர். 20 இற்கு இருபது அறையொன்றில் 12 அதிகாரிகள் மாத்திரமே வாக்கெண்டும் பணிகளில் ஈடுபடமுடியும். ஆகையால், மேலதிகமானவர்களை அவ்வறைக்குள் வைத்திருப்பது சாத்தியமில்லை. இதனைப் புரிந்துகொண்டு, கண்காணிப்பில் ஈடுபடும் தம் கட்சி அங்கத்தர்களை ஒவ்வொரு கட்சிகளும் அறிவுறுத்த வேண்டும். சுகாதார அணுகுமுறைகளைச் சரியாப் பேணி, வாக்கெண்ணும் பணிகளை சீராகச் செய்வதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்’ எனவும் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய வேண்டுகோள் விடுத்தார்.

### சட்டத்தை மதிக்க வேண்டும்

‘கொவிட்-19 பரவல் காலத்தில் இடம்பெறும் பொதுத் தேர்தலில் அனைத்து சட்டதிட்டங்களையும் மதித்து நடக்க வேண்டும். தேர்தல் சட்டதிட்டங்களை அனைத்து வேட்பாளர்களும் மதித்து நடக்க வேண்டும். பதாகைகளைக் காட்சிப்படுத்தல், விளம்பரங்களைக் கண்டகண்ட இடங்களில் ஒட்டுதல், அளவுக்கதிகமாகக் கூட்டங்கூட்டுதல் போன்ற செயல்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். நெருக்கடியான சூழ்நிலையில் நடைபெறும் இத்தேர்தலை சுமுகமாக நடத்துவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

### விலகலை ஏற்றுக்கொள்ளோம்

‘வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துவிட்டு, தேர்தல் போட்டியிலிருந்து விலகிக்கொள்கிறோம் என அறிவிக்கும் வேட்பாளர்களை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம். அது அவர்களின் தனிப்பட்ட முடிவும். தேர்தல் ஆணைக்குழுவுக்கு அவர்களின் தனிப்பட்ட முடிவுகள் பற்றிய அக்கறையில்லை’ என்ற தவிசாளர், ஆறுமுகன் தொண்டமான் உயிரிழந்தமையால் அவருக்குப் பதிலாக ஜீவன் நியமிக்கப்பட்டிருக்கிறார். அசோகவின் உயிரிழப்புப் பற்றிய உரிய அறிவிப்புகள் இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை. இப்படியான விதிவிலக்குகள் மாத்திரமே கவனத்திற்கொள்ளப்படும்’ எனவும் கூறினார்.

### சிறிதரனுக்கு எதிராக நடவடிக்கை

2004ஆம் ஆண்டில் 75 வாக்குகளைத் தான் அளித்ததாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் வழங்கிய செவ்வி தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விக்கு, ‘அப்படி அவர் கூறியமை தொடர்பில் பலர் என்னிடம் கேள்வி கேட்டார்கள். ஆனால், முறைப்பாடுகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. அப்படி யாராவது முறைப்பாடு செய்தால் இவ்விடயம் தொடர்பில் நாங்கள் ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுப்போம்’ என்று கூறினார் மஹிந்த தேசப்பிரிய.

### ஆயிரத்தை நாங்களே நிறுத்தினோம்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்ட ஆயிரம் ரூபாய் நாட்கூலிகளை தேர்தல் ஆணைக்குழு நிறுத்தியதாகப் பிரதமர் மஹிந்த தெரிவித்த கருத்துத் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விக்கு, ‘எங்களிடம் இக்கோரிக்கைக் கடிதம் வந்தது. அதனை நாங்கள்தான் தடுத்து நிறுத்தினோம். நிறுத்தியமைக்கான காரணம் வேறு. தொண்டமானின் இறுதி ஆசைக்கிணங்கவே ஆயிரம் ரூபாய் வழங்குகின்றோம் என்று தெரிவிப்பது அரசியல் சட்டத்துக்கு விரோதமானது. அப்படியொரு முன்னெடுப்பு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டமையாலேயே அதனைத் தற்காலிகமாக நிறுத்தினோம். அவை தவிர, சத்தியாக்கிரக போராட்டங்களினூடாக இக்கோரிக்கை நிறைவேற்றப்படுமென அரசாங்கம் முடிவெடுத்திருந்தால் அதனை நாங்கள் தடுத்திருக்க மாட்டோம்’ என தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

## ‘முதல் 90 அலகுகளுக்கு 25% கட்டணம் குறையும்’

இதேவேளை, மின் கட்டணங்களுக்கு மானியம் வழங்குவது தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு முன்வைத்த பரிந்துரைகள் தொடர்பில் திறைசேறி அதிகாரிகள் ஊடாக, மேலும் ஆராய்ந்து பொதுமக்களுக்கு வழங்க வேண்டிய மேலதிக மானியம் தொடர்பான இறுதி முடிவு அடுத்த வாரம் எடுக்கப்படும் என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (9) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துரைத்த அவர்,

கொரோனா தொற்றால் மூன்று மாதங்கள், மக்கள் வீட்டில் முடங்கியிருந்ததால், மின் பாவனை அதிகரித்தது. இது தொடர்பில் கவனம் செலுத்திய மின்சக்தி அமைச்சர் மஹிந்த அமரவீர, மின் கட்டணப் பட்டியலுக்கு வழங்க வேண்டிய மானியம் தொடர்பில் பரிந்துரைகளை சமர்ப்பிக்க குழுவொன்றை நியமித்ததாகவும் இந்தக் குழு பல பரிந்துரைகளை முன்வைத்தது என்றார்.

மின்சாரக் கட்டணங்களை செலுத்த மேலதிகமாக 3 மாதங்களை வழங்கவும் தாமதக் கட்டணங்களுக்கான அபராதத் தொகையை அறவிடாமல் இருக்கவும் மின்சாரக் கட்டணத்தை செலுத்தாவிடின் எக்காரணத்தைக் கொண்டும் மின்துண்டிப்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படாது என்றார்.

# ஜனாதிபதி இன்று மாத்தளைக்கு விஜயம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரத்தை பலப்படுத்தும் வகையில் இன்று (10) மாத்தளைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அதன்படி நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் பொதுஜன பெரமுன வேட்பாளர்களின் வெற்றிக்காக ஜனாதிபதி மாத்தளை மாவட்டத்தில் நடைபெறவுள்ள பல மக்கள் சந்திப்புகளில் பங்கேற்கவுள்ளார்.

கலேவெல பொது விளையாட்டரங்கு உள்ளிட்ட பல பகுதிகளில் பொதுஜன பெரமுனவின் பிரசார கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

# ‘இடுகம’ நிதியத்தின் வைப்பு மீதி அதிகரிப்பு

தனிப்பட்ட, நிறுவன அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புகளுடன் ‘இடுகம’ கொவிட் - 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி 1456 மில்லியனாக அதிகரித்துள்ளது.

மதுவரி திணைக்களம் 3,500,000 ரூபாயையும் செல்வி.என்.டப்ளியு. சித்துமி சாவிந்தி 5,000 ரூபாயையும் திருமதி எச்ஜி. புஷ்பா 5,000 ரூபாயையும் கே.ஜி.அபயவர்தன 5,000 ரூபாயையும் இந்நிதியத்துக்கு அன்பளிப்பு செய்துள்ளனர். மேற்படி காசோலைகளை பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ விடம் கையளித்தார்.

தற்போது இடுகம கொவிட் 19 சுகாதார, பாதுகாப்பு நிதியத்தின் மீதி 1,456,865,619.45 ரூபாயாக அதிகரித்துள்ளது.

உள்நாட்டு, வெளிநாட்டு நன்கொடையாளர்கள் இக்கணக்குக்கு பங்களிப்பு செய்து வருகின்றனர். காசோலைகள் அல்லது டெலிகிராப் மூலமாகவோ itukama.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகவோ அல்லது #207# என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு பங்களிப்புச் செய்ய முடியும்.

# பீடி இலைகளை அழிப்பதற்குத் தீர்மானம்

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்படும் பீடி இலைகளை அரசுடைமையாக்கி, ஏலத்தில் விற்பனை செய்யும் செயற்பாட்டைத் தடை செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

சுங்கத் திணைக்களத்தின் அதிகாரிகளால் கைப்பற்றப்படும் பீடி இலைகள், அரசுடைமையாக்கப்பட்டு அவை பொது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு வந்தன.

மேற்படி பீடி இலைகளால் தயாரிக்கப்படும் பீடிகளால், அவற்றைப் பாவனை செய்வோரின் உடல் நலம் பாதிக்கப்படும் என்ற காரணத்தால், மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# சுதந்திரபுரத்தில் 14ஆம் திகதி அகழ்வு

■ செ.கீதாஞ்சன்

புதுக்குடியிருப்பு - சுதந்திரபுரம் பகுதியில், அடையாளம் காணப்பட்ட மனித எச்சங்களை, நேற்று (09) நேரில் சென்று பார்வையிட்ட முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.லெனின்குமார், ஜூலை 14ஆம் திகதியன்று, அப்பகுதியில் அகழ்வுப் பணியை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

ஜூலை 4ஆம் திகதியன்று, சுதந்திரபுரம் பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றைத் துப்புரவு செய்யும் போது, அன்று மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டிருந்தன.

இதைத் தொடர்ந்து, அப்பகுதிக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வயம்ப பல்கலைக்கு புதிய கட்டடம்

வயம்ப பல்கலைக்கழகத்தில் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்த கட்டடத்தொகுதியை நிர்மாணிப்பதற்கு, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

1560.36 மில்லியன் ரூபாய் பெறுமதியான இந்தத் திட்டத்தை, குருநாகலில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றிடம் கையளிக்க அரசாங்கம் தீர்மானித்து.

உயர்கல்வி, தொழில்நுட்பம், புத்தாக்க அமைச்சின் யோசனைக்கே, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

# நான்கு ஹெலிகொப்டர்களை கொள்வனவு செய்ய அனுமதி

■ மகேஸ்வரி விஜயனந்தன்

இலங்கை விமானப் படையினருக்கு பயன்படுத்தப்பட்ட நான்கு ஹெலிகொப்டர்களை கொள்வனவு செய்ய, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதென, அமைச்சரவைப் பேச்சாளர்களுள் ஒருவரான அமைச்சர் ரமேஸ் பத்திரண தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (9) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்துரைத்த அவர், சர்வதேச ஏலத்தின் ஊடாக பயன்படுத்தப்பட்ட நான்கு ஹெலிகொப்டர்களை கொள்வனவு செய்வதற்கான யோசனையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ முன்வைத்த யோசனைக்கே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுளது என்றார்.

# ‘மூன்றிலிரண்டை பெற முடியாது’



விகிதாசார முறையின் ஊடாக மூன்றிலிரண்டு பெரும்பான்மை பெறுவதென்பது எவ்வாறு சாத்தியப்படுமென்பது தனக்குத் தெரியாதெனத் தெரிவித்துள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த யாப்பா அபேவர்தன, மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறுவதென்றால், 150 ஆசனங்களைப் பெற வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்துள்ள அவர், 150 ஆசனங்களைக் கைப்பற்றுவதற்கு 94 சதவீதமானவர்கள் வாக்களிக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ள அவர், இதனை நினைத்துக்கூடப் பார்க்க முடியாதெனவும் கூறியுள்ளார்.

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில், 130 ஆசனங்களை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கைப்பற்றுமென, தான் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ‘நல்லாட்சியை விமர்சிக்க தகுதியில்லை’



ஹம்பாந்தோட்டை மக்களை ஏமாற்றியது போல், குருநாகல் மாவட்ட மக்களையும் வாக்குகளுக்காக இப்போது ஏமாற்றி க்கொண்டிருக்கிறார்கள் என, தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் முன்னாள் ஆளுநருமான அசாத் சாலி தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்தபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர், “ஹம்பாந்தோட்டையில் கப்பல் வராத துறைமுகம், விமானம் தரையிறங்காத விமான நிலையம், கிரிக்கெட் விளையாட முடியாத சூரியவெவ கிரிக்கெட் மைதானம், கூட்டங்கள் நடத்த முடியாத மாநாட்டு மண்டபங்கள் ஆகியவற்றை அமைத்து, அவர்களை முட்டாள்களாக்கியது போன்று, இப்போது குருநாகல் மாவட்ட மக்களையும் பொய்களைக் கூறி, ஏமாற்றத் தொடங்கியுள்ளனர் என்றார்.

மஹிந்த அரசால் அமைக்கப்பட்ட ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை நல்லாட்சி அரசு விற்றுவிட்டதாகவும் விற்ற பணம் எங்கே இருக்கின்றதென்று கூட தெரியாதென்றும், பிரதமர் தேர்தல் மேடைகளில் கூறிவருகின்றார். நிதி அமைச்சராக இருக்கும் பிரதமர், பொறுப்பில்லாமல் இவ்வாறு கூற முடியுமா? அந்தப் பணத்துக்கு என்ன நடந்தது? அல்லது நல்லாட்சி அரசின் முக்கிய பிரமுகர்களிடமா இந்தப் பணம் இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொல்லாமல், வெறுமனே வாக்குக் கேட்பதற்காக இவ்வாறான கதைகளைக் கதைக்கக் கூடாது என்றார்.

இலங்கைச் சொத்துகளை விற்பனை செய்த சூரர்கள் யாரென்று மக்களுக்கு நன்கு தெரியும் எனத் தெரிவித்த அசாத் சாலி, இலங்கையின் பொருளாதாரத்தை பாதாளத்துக்கு தள்ளியவர்கள், நல்லாட்சி அரசு பற்றி விமர்சிக்க எந்தவித தகுதியும் இல்லாதவர்கள்” எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ‘அலரி மாளிகையைக் கைப்பற்றவே முயற்சி’



ஐக்கிய தேசிய கட்சியைவிட்டுச் சென்றவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்திருப்பதாக அக்கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் தயாகமகே தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான, ஐக்கிய தேசிய கட்சியின் அரசாங்கத்துக்கு உதவுவதற்காக, ஜனநாயக நாடுகளில் இருந்து, 6 ஆயிரம் மில்லியன் டொலர்களை வழங்குவதற்கு வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதாக, அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சிலர் சிறிகொத்தவை கைப்பற்றப்போவதாகக் கூறுகிறார்கள். ஆனால், நாம் அலரி மாளிகையைக் கைப்பற்றவே முயல்கிறோம் என, தயாகமகே மேலும் தெரிவித்துள்ளார்.

பறிமுதல் செய்த

# வாகனங்களைப் பயன்படுத்த அனுமதி

■ மகேஸ்வரி விஜயனந்தன்

இலங்கைக்கு சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்டு, சுங்கத் திணைக்களத்தால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட வாகனங்களை , அரச நிறுவனங்களின் பாவனைக்காக விடுவிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதெனத் தெரிவித்த அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஸ் பத்திரண, நிதியமைச்சர் மஹிந்த ராஜபக்‌ஷ முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதென்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (9) நடைபெற்ற, அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அமைச்சர், இலங்கைச் சுங்க கட்டளைச் சட்டத்தின் 160 ஆவது உறுப்புரையின் கீழ், சுங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக சுங்கத் திணைக்கள பணிப்பாளருக்கு எழுத்து மூல கோரிக்கை விடுக்கப்பட வேண்டும் என்றும் அவ்வாறு வாகனங்களை அரச திணைக்களங்களுக்கு வழங்கும் போது, வழக்கு விசாரணைகளுடன் தொடர்புடைய வாகனங்கள் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்படாதென்றும் அடையாளம் காணப்பட்ட வாகனங்கள் தொடர்பில் தீர்வை வரி செலுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இது தொடர்பான கோரிக்கை சம்பந்தப்பட்ட கட்டுப்பாட்டு ஆணையாளரால், திறைசேரி செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொண்ட பின்னர், வாகனங்கள் அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்படும் என்றார்.

# ‘தற்போதைய அரசாங்கம் பொய்களையே கூறுகிறது’



தற்போதைய அரசாங்கம் பொய்களை மாத்திரமே கூறி வருகிறது. வேறு எந்தவொரு வேலைத்திட்டத்தையும் மேற்கொள்ளவில்லையென, ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட குழுத் தலைவர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர், கொழும்பு - கண்டி அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணப்பணிகள் நிறைவடையும் பட்சத்தில் கண்டியிலிருந்து கொழும்புக்கு வருகைதருவோர் 2 மணித்தியாலங்களைச் சேமிக்க முடியும் எனத் தெரிவித்த அவர், தற்போதைய அரசாங்கம் நெடுஞ்சாலை நிர்மாணப் பணிகளைத் தாமதித்து வருவதையிட்டு, கண்டி மக்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாக, அவர் தெரிவித்தார்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும், கொழும்பு- கண்டி அதிவேக நெடுஞ்சாலையின் 38 கிலோ மீற்றர் வரையான நிர்மாணப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டன என்றும் சுட்டிக்காட்டினார்.

# ‘ஒற்றுமைப்படாவிட்டால் இலங்கைக்கு எதிர்காலமில்லை’


இனங்களுக்கிடையிலான ஒற்றுமையே நாட்டின் அபிவிருத்திக்கு வழியெனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட வேட்பாளர் ராஜித சேனாரத்ன, ஒற்றுமைப்படாவிட்டால், நாட்டுக்கு எதிர்காலமில்லை எனவும் தெரிவித்தார்.

கட்டுகுருந்த பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றிலேயெ, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர், நாட்டில் தேசிய ஒற்றுமையை முதன்மையாகக் கருதும் அரசாங்கமொன்றை அமைக்க முடியுமெனவும் இனவாதிகளை விடுத்து நாடு ஒற்றுமைப்பட்டால் மாத்திரமே, நாட்டை முன்னோக்கி நகர்த்த முடியுமெனவும் தெரிவித்தார்.

அத்துடன், தற்போது நாட்டின் பொருளாதாரம் நாளாந்தம் வீழ்ச்சியடைந்து வருகிறது. இதனால், நாளாந்தம் வாழ்க்கைச் சுமையும் அதிகரித்து வருகிறது என்றார்.

இதனால், சகல இனத்தவரையும் இணைத்துக்கொண்டு, முழு உலகமும் ஏற்றுக்கொள்ளும் நிலைமையை உருவாக்குவோம் எனவும் தெரிவித்தார்.



கட்டுநாயக்கவில்

# பிசிஆர் பரிசோதனைக்குத் தனிப்பிரிவு

■ டி.கே.ஜீ.கபில

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வருகைதரும் பயணிகளுக்கு இலவசமாக பிசிஆர் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும், அதன் முடிவுகளை சுகாதார அமைச்சுக்கு கையளிப்பதற்குமான விசேட பிரிவொன்று, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று (09) திறக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரிவுக்கு, உயிரியல் வைத்திய ஆய்வுக்கூடமென பெயரிடப்பட்டுள்ளதுடன், அங்கு பிசிஆர் பரிசோதனைக்கான 2 இயந்திரங்களும் பொருத்தப்பட்டுள்ளன.

மேலும் அணு அமிலங்களை வேறுபடுத்துவதற்கான தன்னியக்க இயந்திரங்கள் இரண்டும், பாதுகாப்பாகப் பொருள்களை வைத்துகொள்வதற்கான தொகுதிகள் 03 அமைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆய்வுக்கூடத்தின் ஊடாக, ஒரு நாளில் 500 பிசிஆர் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

70 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இவ்விசேட பிரிவில், நாட்டிலுள்ள பல்வேறு வைத்திசாலைகளுக்கு அன்பளிப்பு செய்யப்பட்ட வைத்திய இயந்திரங்களும் பொருத்தப்பட்டுள்ளன.


எவ்வாறாயினும், இந்த ஆய்வுகூடத்துக்கு சுகாதார அமைச்சால் எவ்வித செலவுகளும் செய்யப்படவில்லை என்பதுடன், 16.5 மில்லியன் ரூபாயை வரையறுக்கப்பட்ட விமான சேவை நிறுவனம் பெற்றுக்கொடுத்துள்ளது.

தனியார் வைத்தியசாலைகளில் பிசிஆர் பரிசோதனைகளுக்காக 6000-8000 ரூபாய் அறவிடப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.




யாழில் உத்தியோகத்தர் மீது வாள்வெட்டு:

# சந்தேக நபர்களுக்கு மறியல்; பதுங்குமிடம் முற்றுகை



எம்.றொசாந்த், என்.ராஜ்

யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்துக்கு முன்னால், நேற்று முன்தினம் (08) உத்தியோகத்தர் ஒருவர் மீது வாள்வெட்டு மேற்கொண்டமை தொடர்பில், யாழ்ப்பாணப் பொலிஸாரால் அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள், மல்லாகத்தில் வைத்து, நேற்று முன்தினம் (08) இரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 30 வயதுக்கிடைப்பட்ட இளைஞர்களெனவும், இவர்கள், "கனி குழு" எனும் வன்முறைக் கும்பலை சேர்ந்தவர்களெனவும், பொலிஸார் கூறினர்.

சந்தேகநபர்களிடம் இருந்து, வாள்கள் - இரண்டு, கைக்கோடரி - ஒன்று, மோட்டார் சைக்கிள்கள் - 2, ஓட்டோ - 1 என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

### வாக்குமூலத்தில் பதுங்குமிடம் முற்றுகை

கைதுசெய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, பிரதான சந்தேக நபரான மருதனார் மடத்தைச் சேர்ந்த ஜெகன் என்றழைக்கப்படும் கைலாயம் என்பவர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில், மேற்குறிப்பிட்ட வாள்வெட்டு வன்முறைக் கும்பல் தமது பதுங்குமிடமாகப் பயன்படுத்திய நீர்வேலி - கரந்தன் பகுதியில் உள்ள வீடொன்றைப் பொலிஸார் சுற்றிவளைத்தனர்.

அவ்வீட்டில், சோதனை மேற்கொண்ட பொலிஸார், வீட்டுக்குள் இருந்தும் வீட்டின் பின் பகுதியில் உள்ள வாழைத் தோட்டத்தில் இருந்தும் கைக்குண்டு - ஒன்று, வாள்கள் - மூன்று, மோட்டார் சைக்கிள்கள் - இரண்டு, இராணுவச் சீருடைகள், தேசிய அடையாள அட்டைகள் உள்ளிட்ட பொருள்களைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்த வீட்டில் இருந்தே, இக்குழுவினர் வாள் வெட்டுக்களை மேற்கொள்ளத் தயாராகிச் செல்வதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

### நீதிமன்றத்தில் ஆஜர்

கைது செய்யப்பட்டவர்களை, நேற்று (09) யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது, அவர்களை, ஜூலை 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு, நீதவான் ஏ.பீற்றர் போல் உத்தரவிட்டார்.

"சந்தேக நபர்கள் 6 பேருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கொன்று, நேற்று முன்தினம் (08) காலை, மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்தது. அதனைச் சாட்டாக வைத்து, நேற்று முன்தினம் காலை 8 மணிக்கு, யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக ஊழியர் மீது தாக்குதல் நடத்திவிட்டு, மல்லாகம் நீதிமன்றுக்குச் சென்றுள்ளனர்" என்று யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னான்டோ மன்றுரைத்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை – ஆப்கானிஸ்தான் நாடுகளுக்கிடையில்

# 'கைதிகள் பரிமாற்றம்'



அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக ரமேஸ் பத்திரண தெரிவிப்பு

மகேஸ்வரி விஜயானந்தன்

இலங்கை - ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையில் கைதிகளைப் பரிமாறிக்கொள்வது தொடர்பில் நீதியமைச்சர் நிமல் ஸ்ரீபால டீ சில்வா முன்வைத்த யோசனைக்கு, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதென, அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஸ் பத்திரண தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில், நேற்று (09) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், 1995ஆம் ஆண்டு 5ஆவது இலக்கம் என்ற குற்றவாளிகளை ஒப்படைப்பது தொடர்பான ஏற்பாடுகளுக்கு அமைய, குற்றமிழைத்துத் தண்டனை நிறைவேற்றப்பட்டு, சிறையில் அடைக்கப்படும் கைதிகள், அந்தத் தண்டனையை அனுபவிப்பதற்காக தமது சொந்த நாடுகளிடம் ஒப்படைப்பது தொடர்பான ஒப்பந்தத்தின் கீழேயே, இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதென்றார்.

இதனடிப்படையில், ஆப்கானிஸ்தான், இலங்கைக்கு இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஊடாக கைதிகளைப் பரிமாற அனுமதி வழங்கப்பட்டுள்ளதெனவும், ரமேஸ் பத்திரண கூறினார்.

எனினும், பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டுக் கைதுசெய்யப்பட்டுள்ளவர்களும் போதைப்பொருள் குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளவர்களும் இந்த ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளின் கீழ் உள்ளடக்கப்படவில்லை என்றும், அவர் கூறினார்.

# யாழுக்கு மஹிந்த விஜயம்

என்.ராஜ்

வடக்கு மாகாணத்தின் தேர்தல் நிலைமைகள் தொடர்பில் ஆராய்வதற்கென, தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தலைமையிலான குழுவினர், யாழ்ப்பாணத்துக்கு திங்கட்கிழமையன்று (13) விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

# அரச விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

பி.எம்.எம்.ஏ.காதர்

கலைத்துறையில் விசேட பங்களிப்பு வழங்கி வரும் 2020.12.15ஆம் திகதி 60 வயதைப் பூர்த்தி செய்யும் முஸ்லிம் கலைஞர்களிடமிருந்து கலாபூஷண அரச விருது பெருவதற்கான விண்ணப்பங்களை, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கோருகின்றது.

விண்ணப்பப் படிவங்களை, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் இணையத்தள முகவரியான www.muslimaffairs.gov.lk மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து, பிரதேச செயலாளரின் சிபாரிசுடன், 2020.07.27 திகதிக்கு முன்னர் "பணிப்பாளர், முஸ்லிம் சமயப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம், இல.180, டீ.பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு-10" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். பிரதேச செயலாளரால் சிபாரிசு செய்யப்படாத விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது என்பதையும் கவனத்திற்கொள்ளவும்.

இவ்வருடத்தில்

# '2,327 கி.கி போதைப்பொருள் மீட்பு'

என்.ராஜ், செந்தூரன் பிரதீபன், எம்.றொசாந்த்

வடக்கில், இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில், 2,327 கிலோகிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள்கள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளனவென, வடக்கு மாகாணக் கடற்படைக் கட்டளைத் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2019ஆம் ஆண்டில் 2,096 கிலோகிராம் கஞ்சா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது, இவ்வருடம் போதைப்பொருள் கடத்தல் அதிகரித்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளதெனவும், அத்தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

தேர்தலில் போட்டியிடும்

# வேட்பாளர்களுக்கு அறிவுறுத்தல்கள்

பாறுக் ஷிஹான்



நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் சுகாதார நடைமுறையுடன் கொரோனா வைரஸ் அச்சுறுத்தலில் இருந்து எவ்வாறு பாதுகாப்புப் பெறுவது தொடர்பிலான அறிவுறுத்தல் கூட்டம், கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையத்தில், நேற்று (09) நடைபெற்றது.

இக்கூட்டம், கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய சுற்றாடல் பாதுகாப்பு பொறுப்பதிகாரி எஸ்.எல் சம்சுதீன் தலைமையில் நடைபெற்றது.

கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.பி. இந்திக்க உதயங்கர, கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம். எச். றிஸ்வின் ஆகியோர் இதில் கலந்துகொண்டு, சுகாதார நடைமுறையுடன் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுப்பது தொடர்பில், பல்வேறு விளக்கங்களை வேட்பாளர்களுக்கு வழங்கினர்.

தேர்தல் காலங்களில் வேட்பாளர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், மக்களுக்கும் வேட்பாளர்களுக்கும் இடையே சமூக இடைவெளி பேணல், தேர்தல் கூட்டங்களை எவ்வாறு ஒழுங்குபடுத்துவது, கைகளைக் கழுவுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், முகக்கவசம் அணிதலின் அவசியம் என்பன குறித்து வேட்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேற்படி சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது, கட்சிக் கூட்டங்களை நடத்துபவர்கள், கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் கைது செய்யப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என, பதில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்சரித்தார்.

இக்கூட்டத்தில், பொதுத் தேர்தலில் கல்முனை தொகுதியில் போட்டியிடும் பல கட்சிகளின் வேட்பாளர்கள் கலந்துகொண்டிருந்தனர்.





# விசேட மாநாடு

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன முஸ்லிம் சம்மேளனத்தின் குருநாகல் மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில், குருநாகல் மாவட்ட முஸ்லிம் வர்த்தகப் பிரமுகர்களுக்கான விசேட மாநாடு, குருநாகல் புளூ ஸ்கை ஹோட்டலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன முஸ்லிம் சம்மேளனத்தின் தலைவரும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியலுக்கான வேட்பாளருமான சட்டத்தரணி அலி சப்ரி தலைமையில் நேற்று முன்தினம் (08) நடைபெற்றது. இதன் விசேட அம்சமாக, காந்த சவின பெண்கள் அமைப்பின் தலைவி பெரோமா முஸம்மிலால் வெளியிடப்பட்ட தேர்தல் துண்டுப் பிரசுரம், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, குருநாகல் மாவட்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முதன்மை வேட்பாளர் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்டவர்களுக்கு உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டது.

(படம் – இக்பால் அலி)

# தேர்தல் காரியாலயத்துக்கு அருகில் பெண்ணின் சடலம் மீட்பு

என் ஜெயரட்ணம்

புலத்சிங்கள நகரை அண்மித்த பகுதியில், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தேர்தல் பிரசாரக் காரியாலத்துடன் கூடிய வீட்டின் பின் பகுதியில் இருந்து, மர்மமான முறையில் உயிரிழந்த பெண்ணொருவரின் சடலம், புலத்சிங்கள பொலிஸாரால் நேற்று (09) காலை மீட்கப்பட்டது.

கமகே நதீஷா நிசன்சலா என்ற 36 வயதான மேற்படி பெண், இரத்தினபுரி கிரிஎல்லை பகுதியைச் சேர்ந்த நபரொருவரை திருமணம் முடித்திருந்த போதும் கணவரிடம் இருந்து பிரிந்து தனியே வாழ்ந்து வந்துள்ளார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் (08) இரவு பெண்ணின் வீட்டுக்கு கணவர் வந்ததாகவும் இருவருக்கும் இடையே வாக்குவாதம் இடம்பெற்றதாகவும் அயலவர்கள் தெரிவித்தனர்.

நேற்றும் காலை 6 மணியளவிலேயே கணவர் வீட்டைவிட்டு வெளியேறிச் சென்றதாகவும் அதன் பின்னரே வீட்டின் பின்புறமாகவுள்ள குளியலறைக்கு அருகில் பொலித்தீன் பையினால் மூடப்பட்ட நிலையில் பெண்ணின் சடலத்தை, அயலவர்கள் கண்டுள்ளனர்.

பெண்ணின் கணவரைத் தேடி, பொலிஸார் வலை விரித்துள்ளனர்.

திருகோணமலையில்

# த.தே.கூ தேர்தல் பிரசாரம் தீவிரம்

வடமலை ராஜ்குமார்



"தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட மூதூர் தொகுதிக்கான தேர்தல் பிரசாரக் கூட்டங்கள், அடுத்த வாரத்தில் தீவிரமாக நடைபெறவுள்ளன" என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளையின் தலைவரும் வேட்பாளருமான அ.குகதாசன், நேற்று (09) தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள், தலைவர் இரா. சம்பந்தனின் வழிகாட்டலில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

"அதனடிப்படையில், இம்மாதம் 13ஆம் திகதி, மூதூர் கோட்டத்தின் சம்பூர் பிரசாரக் கூட்டம் மாலை 05 மணிக்கும் 14ஆம் திகதி காலை 10 மணிக்கு கிளிவெட்டியிலும் அன்றே மாலை 05 மணிக்கு மூதூர், இருதயபுரத்திலும் நடைபெறவுள்ளன.

"15ஆம் திகதி, கிண்ணியா, ஆலங்கேணியில் காலை 10 மணிக்கும் அன்றைய தினம் மாலை 05 மணிக்கு மூதூர், பள்ளிக்குடியிருப்பிலும் 16ஆம் திகதி மூதூர், பாட்டாளிபுரத்தில் காலை 10 மணிக்கும் மாலை மூதூர், கட்டைபறிச்சானிலும் பிரசாரக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

"இக்கூட்டங்களில் பொதுமக்களும் கட்சியின் செயற்பாட்டாளர்களும் கலந்துகொண்டு, சம கால அரசியல் நிலை தொடர்பான விளங்கங்களைப் பெறவுள்ளனர்" என்றார்.

ஒரு மாத காலப்பகுதியில்

# 176 துப்பாக்கிகள் மீட்பு

நாடளாவிய ரீதியில் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, வெவ்வேறு வகையான 176 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

2020.06.06 முதல் 2020.07.08 வரையான காலப்பகுதியிலேயே, குறித்த துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.



அதனடிப்படையில், ரி 56 துப்பாக்கிகள் 11, ரி 81 ரக துப்பாக்கி 01, போரா 12 துப்பாக்கி 42, பிஸ்டல் 04, கல்கடஸ் 29, ரிபீடர் 74, வேறு வகை துப்பாக்கிகள் 15 கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது 89 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சங்குப்பிட்டி விபத்தில்

# சுயேச்சை வேட்பாளர்கள் இருவர் படுகாயம்

யாழ். - பூநகரி, சங்குப்பிட்டி பாலத்துக்கு அருகில் நேற்று முன்தினம் (08) இடம்பெற்ற விபத்தில், யாழ். தேர்தல் மாவட்டத்தில் சுயேச்சைக் குழு 03இல் போட்டியிடும் வேட்பாளர்கள் இருவர் உட்பட மூவர் காயமடைந்துள்ளனர்.

விபத்தில், சுயேச்சை குழு 03இன் தலைவரான சுந்தரலிங்கம் செல்வகுமார், வேட்பாளரான யோ.பியதர்சன் ஆகியோரும் இவர்களுடன் இணைந்து பயணித்த ஒருவருமே காயமடைந்துள்ளனர்.

இவர்கள் பயணித்த ஒட்டோவும் டிப்பர் வாகனமுமே சங்குப்பிட்டி பாலத்துக்கு அருகில் விபத்துக்குள்ளாகியது.

# 18 மாடுகளை மோதிய டிப்பர்



சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி - வெலிக்கண்டல் சந்திப் பகுதியில், நேற்று (09) அதிகாலை, வாகனத்தில் மோதுண்டு 18 மாடுகள் உயிரிழந்துள்ளன.

விசுவமடு பகுதியில் இருந்து வேகமாக வந்த டிப்பர் வாகனமொன்று, வீதியில் சென்றுகொண்டிருந்த மாடுகளை மோதித் தள்ளி விட்டு, அவ்விடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளது.

இரணைமடுக் குளத்தின் கீழ் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், கால்நடைப் பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை பயிர்ச்செய்கைக்கு உட்படாத பகுதியான வெலிக்கண்டல் பகுதியில் வைத்து பராமரித்து வருகின்ற நிலையிலேயே, இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

# 'வயிறு இருந்தும் மூளை இல்லாதவர் பிரசன்ன'

கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் பிரசன்ன ரணதுங்க, 8ஆம் தரம் மட்டுமே சித்தியடைந்துள்ளார் எனத் தெரிவித்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, அவருக்கு வயிறு இருக்குமளவுக்கு மூளை இல்லை என்றார்.

"எட்டாம் தரத்தில் மட்டுமே சித்தியடைந்து இருப்பதால், கல்வி கற்றோரை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவதற்கு அவர் விரும்புவதே இல்லை" என்றார்.

குருநாகலில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தன்னுடைய கல்வித் தரத்துக்கு மேல் கற்றவர்களை, நாடாளுமன்றத்துக்கு அனுப்பவிடாமல் தடுப்பதற்கு முன்னின்றுச் செயற்படும் பிரசன்ன ரணதுங்க, எட்டாம் தரத்தில் கற்றவர்களை மட்டுமே, தன்னுடன் வைத்துக்கொள்வதற்கு அவர் விரும்புகின்றார் என்றார்.

கம்பஹா மாவட்டத்தில், இம்முறை தேர்தலில் புத்திசாலியான வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். ஆகையால், பிரசன்ன ரணதுங்கவுக்கு அது பெரும் சவாலாக அமைந்துள்ளது எனத் தெரிவித்த அவர், ஆகையால்தான், ஏனையோருக்குச் சேறுபூசும் செயற்பாடுகளை அவர் முன்னெடுத்துள்ளார் என்றார்.



# 2,366 முறைப்பாடுகள்

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் இதுவரையிலும் 2,366 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனத் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து அறிக்கையிடப்பட்டிருந்த தாக்குதல் சம்பவமொன்று வன்செயல்கள் என்பதன் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டது.

எனினும், பொலிஸ் முறைப்பாட்டு அறிக்கையின் படி, ஒரு தாக்குதல் இடம்பெறவில்லை என்பதால், அந்த முறைப்பாடு, வன்செயல்களிலிருந்து நீக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரியிடமிருந்து

# வாகனங்கள் பல சிக்கின

போதைப்பொருள் வர்த்தகர்களுடன் தொடர்பை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், கைதுசெய்யப்பட்ட அதிகாரியிடமிருந்து வாகனங்கள் பல கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த விவகாரம் தொடர்பில், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் அதிகாரிகள் 18 பேர் உட்பட 21 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

அதிலோர் அதிகாரியிடமிருந்தே, 3 லொறிகள் மற்றும் அதிசொகு வாகனமொன்று என்பன, கம்பஹா- பல்லேவெல பிரதேசத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளனவென, பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# 'தோல்வியுற்ற தலைவர் ரணில்'

### ஒன்றும் தெரியாதவர் சஜித்: எஸ்.பீ தெரிவிப்பு

ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இந்த நாட்டின் தோல்வியுற்ற தலைவர் எனத் தெரிவித்துள்ள, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் எஸ்.பி. திஸாநாயக்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, எதுவுமே தெரியாத தலைவர் ஆவார் என்றார்.

ஹட்டனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற, மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இந்தத் தேர்தலில், ஐக்கிய தேசிய கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் ஆகக் குறைந்தளவான உறுப்பினர்களே கிடைக்கும். இலங்கைச் சுதந்திர பொதுஜன பெரமுன, இம்முறைத் தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்று, அதிவிஷேடமான வெற்றியை பெறும். அந்த வெற்றியின் ஊடாக, தேசிய அரசாங்கத்துக்கு எவ்விதமான அவசியமும் இல்லை" என்றார்.

**ஊழல் மற்றும் மோசடி குற்றச்சாட்டுகள் இல்லாதவர்கள் மட்டுமே இணைத்துக்கொள்ளப்படுவர்**



இரண்டாகப் பிளவுப்பட்டுள்ள ஐ.தே.கட்சியின் ஆதரவாளர்களில் பெரும் எண்ணிக்கையானோர், இலங்கைச் சுதந்திர பொதுஜன கூட்டணியில் இணைய முயற்சிக்கின்றனர் எனத் தெரிவித்த அவர், அவ்வாறானவர்களின் ஊழல் மற்றும் மோசடி குற்றச்சாட்டுகள் இல்லாதவர்கள் மட்டுமே இணைத்துக்கொள்ளப்படுவர் என்றார்.

# ஐ.தே.கவின் விஞ்ஞாபனம் இணையத்தில் வருகிறது

ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம், அடுத்தவாரம் வெளியிடப்படவுள்ளது. இந்த விஞ்ஞாபனம், இணையத்தளத்தில் முழுமையாக, வாசிக்கக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகுமென ஐ.தே.க அறிவித்துள்ளது.

வெவ்வேறு துறைகள் தொடர்பில் அதிவிசேடமான காரணங்கள், கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அந்தக் கொள்கைப் பிரகடனம், அச்சடிக்கப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்படும்.

இலங்கையின் தேசிய பாதுகாப்பு, பொருளாதாரம், நகர அபிவிருத்தி, வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் உள்ளிட்ட இன்னும் பல துறைகளையும் உள்ளடக்கியே இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மத்திய வருமானம் பெறும் மக்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் தொடர்பிலான வேலைத்திட்டங்கள் குறித்து, தனியான ஆவணமொன்றும் அச்சடிக்கப்பட்டு, மக்களுக்கு விநியோகிக்கப்படும் என்றும் ஐ.தே.க அறிவித்துள்ளது.



நவாலியில்

# தடைகளை மீறி அஞ்சலி

**கொரோனோ தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் நீங்கள் ஒன்றுகூடியதற்காக உங்கள் அனைவரையும் கைதுசெய்து தனிமைப்படுத்தும் அதிகாரம் எமக்கு உண்டு**

எம்.றொசாந்த்

நவாலி சென். பீற்றர் தேவாலயத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபியில், அஞ்சலி செலுத்த பொலிஸார் தடைகளை ஏற்படுத்திய போதிலும், அதையும் மீறி பொதுமக்கள் நேற்று (09) அஞ்சலி செலுத்தினர்.

இடம்பெயர்ந்த நிலையில் குறித்த தேவாலயத்தில் தஞ்சம் புகுந்திருந்த குழந்தைகள், பெண்கள் உள்ளிட்ட 147க்கும் அதிகமான பொதுமக்கள், 1995 ஜூலை 09ஆம் திகதியன்று, விமானக் குண்டு வீச்சில் உயிரிழந்தனர்.

அவர்களின் நினைவாக, தேவாலயத்துக்கு அருகில் நினைவுத் தூபி அமைக்கப்பட்டுள்ளது. குறித்த தூபியில் அஞ்சலி செலுத்துவதற்காக, பொலிஸார் தடை ஏற்படுத்தி இருந்தனர். பின்னர், அருட்தந்தையர்கள் மட்டும் சுடரேற்றி அஞ்சலி செலுத்த பொலிஸார் அனுமதித்த போதிலும், உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் அஞ்சலி செலுத்த, பொலிஸார் அனுமதிவில்லை.

இந்நிலையில், நேற்றைய அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்ட வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பொலிசாரின் தடைகளை மீறி சுடரேற்ற முற்பட்ட போது பொலிஸ் அதிகாரியொருவர் அவரை இழுத்து விழுத்த முற்பட்டார். இருந்த போதிலும் அதனையும் மீறி சிவாஜிலிங்கம் நினைவு தூபியில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்.

அதனை தொடர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணனும் சுடரேற்றினார். அதனைத் தொடர்ந்து, பொலிஸாரின் தடைகளை மீறி பொதுமக்கள் நினைவுத் தூபியில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

அதன்போது பொலிஸார், "கொரோனோ தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் நீங்கள் ஒன்றுகூடியதற்காக உங்கள் அனைவரையும் கைதுசெய்து தனிமைப்படுத்தும் அதிகாரம் எமக்கு உண்டு" எனப் பொலிஸார் அச்சுறுத்தினர்.

இதன்போது பொலிஸாரிடம் பேசிய அருட்தந்தையர்கள், "மக்கள் சுடரேற்றி அஞ்சலி செலுத்திவிட்டுச் சென்று விடுவார்கள். அவர்களை அஞ்சலி செலுத்த அனுமதிக்கவும்" எனக் கேட்டுக்கொண்டதற்கிணங்க, சமூக இடைவெளியைப் பேணி அஞ்சலி செலுத்துமாறு அறிவுறுத்தி அனுமதித்தனர்.

# 'பிரதமராகும் வாய்ப்பு மஹிந்தவுக்கே அதிகம்'

### மன்னாரில் சித்தார்த்தன்

எஸ்.றொசேரியன் லெம்பேட்



பொதுத் தேர்தலானது, மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் நடைபெற்று வருகின்றதெனத் தெரிவித்த யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் இயக்கத்தின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், அடுத்த பிரதமராக வருவதற்கான வாய்ப்பு, மஹிந்த ராஜபக்ஷவுக்கே இருக்கின்றது என்றார்.

இந்தத் தேர்தல் நடைபெறும் காலத்தில், மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரான கோட்டாபய ராஜபக்ஷவே ஜனாதிபதிப் பதவியில் இருக்கிறார் எனத் தெரிவித்த சித்தார்த்தன், ஆகையால், அதற்கான வாய்ப்புகள் அதிகம் என்றார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கான இணைப்பு அலுவலகம், மன்னார் பனங்கட்டுகொட்டுவில், நேற்று (09) காலை திறந்துவைக்கப்பட்டது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இந்தத் தேர்தலில் மிக பெரும்பான்மையில் அவர்கள் வருவார்கள், மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பற்றி கதைத்தாலும், அவர்களுக்கு 120க்கும் 130க்கும் இடையிலேயே ஆசனங்கள் கிடைக்குமென நம்புகின்றனர்" என்றார்.

அவர்களின் நோக்கம், அரசமைப்புத் திருத்தத்தில் 19ஆவது திருத்தத்தை இல்லாமற் செய்வதாகும். விமல் வீரவன்ச, உதய கம்பன்பில போன்றோர், 13ஆவது திருத்தத்தை இல்லாமற் செய்யும் நோக்கிலேயே உள்ளனர் என்றாலும் அதற்கொருபோதும் இந்தியா அனுமதிக்காது என்றார்.

தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை குறைத்து விடவேண்டுமென்ற நோக்கில் பல கட்சிகள் பல, வடக்கு, கிழக்கில் களமிறக்கப்பட்டுள்ளனர். அரசாங்கத்தை சேர்ந்த கட்சிகளே பல கட்சிகளாக தேர்தலில் வாக்குகளைக் கேட்கின்றனர் எனத் தெரிவித்த அவர், இவற்றையெல்லாம் மனதில் கொண்டும், கடந்த காலத்தை எண்ணியும் நம்மக்கள் வாக்களிக்கவேண்டும் என்றார்.

எந்த அரசாங்கம் ஆண்டாலும்

# 'இனப்பிரச்சினைத் தீர்வுக்கு கூட்டமைப்பு ஒத்துழைக்கும்'

எஸ்.றொசேரியன் லெம்பேட்




எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும், இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் எடுக்கப்பட்ட சகல முயற்சிகளையும், தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கும் என, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.

மன்னாரிலுள்ள அலுவலகத்தில், நேற்று (09) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, என்ன நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டதோ, அந்த நோக்கம் நிறைவேறும் வரை, மக்களின் உரிமைகளுக்காக, நாடாளுமன்றத்திலும் சர்வதேசத்திலும் குரல் கொடுக்கும் எனத் தெரிவித்த அவர், கூட்டமைப்பின் இந்த வகிபாகம், அடுத்த 5 ஆண்டுகளுக்கு, நாடாளுமன்றத்தில் எதிரொலிக்கும் என்றும் அவர் கூறினார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு குறித்து, பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்த அவர், ஆனால், கூட்டமைப்பில் இருக்கும் ஒரு சிலரின் தவறான கருத்துகள், நடவடிக்கைகள் காரணமாக, கூட்டமைப்பை கண்டிப்பதற்கு, மக்கள் முன் நிற்கப் போவதில்லை என்பது, தங்களுக்குத் தெரியும் என்றும் அவர் கூறினார்.

கடந்த காலங்களில், கூட்டமைப்பை விட்டு விலகிச் சென்று வெற்றிபெற்ற வரலாறு இல்லை எனத் தெரிவித்த அவர், கூட்டமைப்பைத் தவிர, சிறிய கட்சிகள் சார்பாக வடக்கில் போட்டியிடுவோர், கடந்த காலங்களைப் போன்று, தொடர் தோல்வியையே சந்திப்பர் என்றும் அவர் கூறினார்.

கூட்டமைப்பைக் கண்டு

# 'ராஜபக்ஷர்கள் அஞ்சுகின்றனர்'

சுப்ரமணியன் பாஸ்கரன்



தமிழ்த் தேசிய கூட்டமைப்பைக் கண்டு, ராஜபக்ஷகள் அஞ்சுவதாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் வேட்பாளருமான சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

புலோப்பளை மக்களுடனான சந்திப்பு, நேற்று (09) நடைபெற்றபோது, அங்கு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

**தேர்தலின் பின்னர், வடக்கு கிழக்கில், இராணுவத் தளபதிகளே உயர்ந்த பதவிகளில் அமர்த்தப்படவுள்ளனர்**

அண்மையில், பசில் ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழர்களுக்கு ஒன்றும் செய்யவில்லை என்று கூறியிருக்கிறார் என்றும் ஆனால், தமிழ் மக்களுக்கு அவர்கள் எந்தத் தீர்வையும் வழங்கவில்லை என்றும் கூறினார். மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியாக இருந்தபோது, அவர்களுடன் 19 தடவை பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் அத்தனை தடவையும் பொய்களையே அவர்கள் கூறியதாகவும் தெரிவித்தார்.

இப்போது வடக்கு மாகாணம் முழுவதும் புதிதாக இராணுவ சோதனை சாவடிகள் முளைத்திருக்கின்றன என்று கூறிய அவர், இதனால் இந்த நாடு, ஒரு இராணுவ ஆட்சியை நோக்கி நகர்வதைக் காணக்கூடியதாக உள்ளது என்று கூறினார்.

ராஜபக்ஷர்களின் இராணுவ ஆட்சியை, சிங்கள மக்களும் நன்கு உணர்ந்துவிட்டார்கள் என்றும் இந்த உண்மையை, சிங்களக் கட்சிகள் சொல்ல ஆரம்பித்துவிட்டன என்றும் அவர் கூறினார்.

தேர்தலின் பின்னர், வடக்கு கிழக்கில், இராணுவத் தளபதிகளே உயர்ந்த பதவிகளில் அமர்த்தப்படவுள்ளனர் என்றும் மாவட்ட அரசாங்க அதிபர்களும் இராணுவத் தளபதிகளாக நியமிக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்றும் அவர் கூறினார்.

'பயங்கரவாத செயற்பாடுகளுடன்

# எமக்குத் தொடர்பே இல்லை'

### ரிஷாட் பதியுதீன் தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்துடனோ வேறெந்த பயங்கரவாதச் செயற்பாடுகளுடனோ தனக்கும் தனது குடும்பத்துக்கும் துளியளவேனும் தொடர்பு கிடையாதென தெரிவித்த முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன், குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் கேட்ட அத்தனை கேள்விகளுக்கும் நான் தெளிவான விளக்கங்களைக் கொடுத்தேன் என்றார்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு நேற்றுக்காலை அழைக்கப்பட்ட அவரிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர், சுமார் 10 மணிநேர விசாரணை நடத்தனர். விசாரணையின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**நான் நிரபராதி. சஹ்ரானை என் வாழ்நாளில் கண்டதே இல்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் எந்தவொரு செயற்பாட்டிலும் எனக்கு துளியளவும் தொடர்புமில்லை. பயங்கரவாதத்தை நான் முற்றாக வெறுப்பவன். என்னையும் எனது சகோதரர்களையும் அநியாயமாக, வேண்டுமென்றே தொடர்புபடுத்துகின்றனர்**

மன்னாரில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் 8 ஆம் திகதி காலை, நான் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, குற்றப்புலனாய்வு பிரிவிலிருந்து எனக்கு தொலைபேசி அழைப்பொன்று கிடைக்கப்பெற்றது. நாளை (09) குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு வாக்குமூலம் அளிக்க வருமாறு கோரப்பட்டேன் எனத் தெரிவித்த அவர், எனது தேர்தல் நடவடிக்கைகள் அத்தனையையும் இடைநிறுத்தி விட்டு, கொழும்பு வந்து, விசாரணைக்கு முகங்கொடுத்தேன்" என்றார்.



உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுடன் தொடர்புபட்ட சம்பவங்கள் குறித்தே பல கேள்விகள் என்னிடம் கேட்கப்பட்டன. குண்டுதாரி இன்ஷாபின் மாமனாரான அலாவுதீன், முன்னர் நான் பதவி வகித்த அமைச்சின் கீழான கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை மற்றும் எனது அமைச்சின் கீழான நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன எனத் தெரிவித்த அவர், குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் கேட்ட அத்தனை கேள்விகளுக்கும் நான் தெளிவான விளக்கங்களைக் கொடுத்தேன்" என்றார்.

"என்னைப் பொறுத்தவரையில் நான் நிரபராதி. சஹ்ரானை என் வாழ்நாளில் கண்டதே இல்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் எந்தவொரு செயற்பாட்டிலும் எனக்கு துளியளவும் தொடர்புமில்லை. பயங்கரவாதத்தை நான் முற்றாக வெறுப்பவன். என்னையும் எனது சகோதரர்களையும் அநியாயமாக, வேண்டுமென்றே இந்தச் சம்பவத்துடன் தொடர்புபடுத்துகின்றனர்" என்றார்.

# சலூன் கதவுக்குப் பூட்டுப்போடும் மூன்றிலிரண்டு

சிறுபான்மையினரின் ஆதரவின்றி, தேசிய கட்சிகளுக்கு ஆட்சியமைக்க முடியாது என்றிருந்த காலம் மலையேறிவிட்டது. “சிறுபான்மையினர்” தேவையே இல்லை என்றொரு நிலைமைக்கு, பேரினவாத சக்திகள் உறுதியாக வந்துவிட்டன.

ஜனாதிபதித் தேர்தலில், சிறுபான்மையினரின் ஆதரவின்றி வெற்றியீட்டி விட்டதாக, மார்த்தட்டிக்கொள்ளும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, நாடாளுமன்றத்திலும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை கோரிநிற்கின்றது. பதவியைத் தக்கவைத்துக் கொள்ளவும், பரம்பரை அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கிலுமே அரசமைப்பின் 19ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டதென, ஆர்ப்பரிக்கும் பெரமுன கட்சி, 13ஆவது திருத்தத்திலும் கையை வைப்பதற்கும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆணையைக் கோரிநிற்கிறது.

19ஆவது திருத்தம், ராஜபக்ஷர்களுக்கு கால்கட்டு இட்டாலும், 13 ஐ இல்லாமற் செய்வது 13ஆவது திருத்தத்தின் ஊடாக, தமிழர்களுக்குக் கிடைத்த அற்பசொற்ப அதிகாரங்களுக்கும் முற்றுமுழுதாய் முத்தாய்ப்புப் போடும் முயற்சியாகும்.

யாரும் வரலாம், எப்போது வேண்டுமானாலும் வெளியேறலாம் என்பதற்காகவே, அரசாங்கத்தின் கதவு, சலூன் கதவென அர்த்தப்படுத்தப்பட்டது. ஆனால், இரும்புக் கதவு போடவேண்டுமென மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கோரியுள்ளார். அப்படியாயின், யாருடைய ஆதரவும் தேவையில்லை என்பதே அர்த்தமாகும். இதில், சிறுபான்மையினர் குறிவைக்கப்பட்டுள்ளனர் என்பது மட்டுமே உண்மை.

இன, மத வாதங்களை நஞ்சைக் கக்கி, பேரினவாதிகளைச் சூடேற்றியிருக்கும் இவ்வேளையில், சிறுபான்மையின வேட்பாளர்கள் மிகக் கவனமாகப் பிரசாரங்களை முன்னெடுக்க வேண்டும். வாக்காளர்களும் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.ஐ.தே.க, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய இரண்டு கட்சிகளிலும், சர்ச்சைக்குரிய தமிழ், முஸ்லிம் வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர். ஆகையால், நாடு துண்டாடப்பட்டுவிடுமென பிரசாரங்கள் முன்னெடுக்கப்படலாம். ராஜபக்ஷர்கள் விடுத்திருக்கும் அறிவிப்புகளால், பேரினவாத சிந்தனை கொண்டவர்கள், புள்ளடிகளை அள்ளியடித்துவிட்டால், மூன்றிலிரண்டு இலகுவாய் கிடைத்துவிடும். அதன்பின்னர், சிறுபான்மையினர் அந்த அரசாங்கத்துக்கு செல்லாக்காசாகிவிடுவர்.

அதன்பின்னர், சிறுபான்மையின மக்களின் பாதுகாப்புக்கூட கேள்விக்குறியாகும். அதைத் தட்டிக்கேட்பதற்கு, அமைச்சரவைக்குள்ளும் எந்தவொரு சிறுப்பான்மை அமைச்சர்களும் இல்லாமல் இருப்பர். அவற்றையெல்லாம் விடவும், அரசமைப்பை முற்றிலும் மாற்றியமைக்கும் அறிவிப்பானது. பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. பேரினவாத பூனைகளுக்கு இவ்வாறான அறிவிப்புகள் தீனிபோடுபவையாக இருக்கும்.


தமிழ்Mirror
www.tamilmirror.lk
NO 8. HUNUPITIYA CROSS ROAD,
COLOMBO 2. P.O. BOX 1136
EDITORIAL:
TEL: 011 2 479 372-6,
011 2 479 479 (EX.375)
FAX: 011 2 304 114
MARKETING MANAGER
(DIR.) 011 2 479 822,
077 3421 476
CIRCULATION MANAGER
(DIR.) 2 479 672, 077 3 219 775,
SUBSCRIPTION MANAGER
(DIR.) 2 479 626, 2 479 628,
077 3 502 183
E-MAIL: tamilmirror@wijeya.lk




## தமிழ்மிரருக்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகையில் வெளியாகும் ஆக்கங்கள் தொடர்பான உங்களது கருத்துக்களையும் விமர்சனங்களையும் வரவேற்கிறோம். அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு அறியத்தரலாம். மேலும், உங்கள் பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு எழுதி அனுப்பி வைக்கலாம். அவை உரிய காலத்தில் பிரசுரிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
இலக்கம் 8, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு – 02.
தொலைபேசி – 011-2479372-6
தொலைநகல் – 0112304114
மின்னஞ்சல் – tamilmirror@wijeya.lk


# சுமந்திரனைத் தோற்கடிக்கும் அழைப்பும் அபத்தமும்

**கே. சஞ்சயன்**

விடுதலைப் புலிகளின் முன்னாள், மூத்த போராளியான பசீர் காக்கா, அண்மையில் யாழ்ப்பாண ஊடக அமையத்தில் நடத்திய ஒரு செய்தியாளர் சந்திப்பு, பலரதும் கவனத்தை ஈர்த்திருக்கிறது.

முதல் மாவீரர் தொடக்கம், கடைசி மாவீரரின் மரணம் வரை அவர், விடுதலைப் புலிகளுடன் பயணித்தவர்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், அவ்வப்போது மாவீரர் நாள், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் விடயங்களில் அகமுரண்பாடுகள் ஏற்பட்டபோது, ஊடக அமையத்தில், தமது கருத்துகளை முன்வைத்து, அந்த நிகழ்வுகளில் காணப்பட்ட சில தடைக் கற்களை அகற்றியவர்.

இதுவரை அரசியல் கருத்துகளை, ஊடக சந்திப்புகளில் வெளிப்படுத்தாத அவர், இம்முறை நேரடியாகவே அரசியல் ‘பந்தை’ எடுத்து ஆடியிருக்கிறார்.

ஒரு மாவீரரின் தந்தை என்ற வகையிலும், முன்னாள், மூத்த போராளி என்ற வகையிலும் அவர் வெளியிட்டிருக்கின்ற கருத்து, ஒரு தனிநபரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலாகவே அமைந்திருக்கிறது. அவரால் இலக்கு வைக்கப்பட்டவர், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆவார்.

தமிழ் அரசியல் பரப்பில், சர்ச்சைகளின் நாயகன் சுமந்திரன் தான். அவரைச் சுற்றி எப்போதும் சர்ச்சைகள் இருப்பது வழக்கம். அவற்றை அவ்வப்போது, அவரும் உருவாக்கிக் கொள்கிறார்; அவரைச் சுற்றியிருப்பவர்களும் உருவாக்கிக் கொள்கின்றனர்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும், யாழ்ப்பாணத்தில் சுமந்திரனைத் தோற்கடிப்பதை இலக்காகக் கொண்டே, பெரும்பாலான கட்சிகள் பணியாற்றின.

அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட அதி தீவிர பிரசாரங்களே, அவரை இன்னும் கூடுதலாகப் பிரபலப்படுத்தியிருந்தது. அதுவே அவரது வெற்றிக்கும் காரணமாகியது.

தற்போதும் கூட, பொதுத்தேர்தலில், யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி, ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய அரசியல் பரப்பிலும் சுமந்திரன் மட்டும் தான் பேசுபொருளாக இருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது, தொடுக்கப்படும் விமர்சனங்கள், தாக்குதல்களுக்கு அப்பால், சுமந்திரனைத் தோற்கடிப்பது ஒரு, தமிழ்த் தேசிய நிகழ்ச்சி நிரல் போல, முன்னெடுக்கப்படுகிறது.

சுமந்திரனைத் தோற்கடித்து விட்டால், தமிழ்த் தேசியம் காப்பாற்றப்பட்டு விடும்; தமிழ் ஈழம் கிடைத்து விடும்; சர்வதேச விசாரணை வந்து விடும்; இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிட்டி விடும்; சமஷ்டி கிடைத்து விடும் என்பன போன்ற மாயைகள் உருவாக்கப்படுகின்றன. தேர்தல் ஒன்றில், பிரசாரங்களின் மூலம் இதுபோன்ற மாயைகள் கட்டியெழுப்பப்படுவது வழக்கம் தான். வாக்குறுதிகளை கொடுத்து வாக்காளர்களைக் கவிழ்ப்பது போலத் தான், இதுபோன்ற மாயைகளின் மூலம் அவர்களைக் கவர்வதும் ஒரு பிரசார உத்தியே.

எவ்வாறாயினும், சுமந்திரன் இப்போது எல்லாத் தரப்பினாலும் இலக்கு வைக்கப்பட்டிருக்கிறார். கடைசியாக அவரை இலக்கு வைத்திருப்பவர் தான், முன்னாள், மூத்த போராளியான பசீர் காக்கா.

சுமந்திரன் மீது இவர் வைத்துள்ள குற்றச்சாட்டுகள் சரியா, தவறா என்ற விவாதத்துக்குள் செல்வது இந்தப் பத்தியின் நோக்கமல்ல. அந்தக் குற்றச்சாட்டுகளில் சில, அவரால் மட்டுமன்றி, ஏனைய பலராலும் முன்வைக்கப்பட்டு வருபவை என்பதை மறந்து விடக்கூடாது.

அவற்றை உதாசீனப்படுத்தி விடவும் முடியாது. தேர்தல் வேளையில் கூறப்படும் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் கடப்பாடு, சுமந்திரனுக்கு உள்ளது. அதனை அவர், முறையாகச் செய்வாரா, செய்கிறாரா என்பது வேறு விடயம்.

அதேவேளை, சுமந்திரன் மீது சுமத்துகின்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், அவரைத் தோற்கடிக்க வேண்டும் என்று நினைக்கின்ற அல்லது, கோருகின்ற உரிமை, பசீர் காக்கா என்ற முன்னாள் போராளிக்கு மாத்திரமன்றி, அனைவருக்கும் இருக்கிறது.

அது ஒவ்வொருவருக்கும் உள்ள அடிப்படை உரிமை. இதில் யாரும் தலையீடு செய்ய முடியாது. அதை விமர்சனமும் செய்ய முடியாது.

அதேவேளை, யாழ். ஊடக அமையத்தில் முன்னாள் மூத்த போராளியான பசீர் காக்கா, ஒரு மாவீரரின் தந்தை என்ற வகையில், முன்வைத்திருக்கின்ற கருத்தில் உள்ள ஆபத்தை, இங்கு சுட்டிக்காட்ட வேண்டியதும் அவசியமே.

தமிழ்த் தேசியத்தைக் காப்பாற்றுவதற்கு, சுமந்திரனைத் தோற்கடிக்க வேண்டும் என்று, அவர் கூறியிருக்கிறார்.

அதற்காக, மாவீரரின் பெற்றோர், தலைவர் பிரபாகரனை நேசிக்கும் முன்னாள் போராளிகள், ஆதரவாளர்கள் அனைவரும் சுமந்திரனுக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்றும், அவரைத் தோற்கடிக்க வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்திருக்கிறார்.

ஒரு இலட்சம் வாக்குகளைப் பெறுவேன் என்ற சுமந்திரனின் கனவைத் தோற்கடிப்பது, முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோரின் கடமை என்றும், அதற்குத் தேவையான எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சுமந்திரனைத் தோற்கடிப்பது துயிலுமில்லத்தில் சுடரேற்றுவதற்கு ஒப்பானது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

சுமந்திரனைத் தோற்கடிப்பதற்காக, ஆயுதப் போராட்டமும், போராளிகளும், மாவீரர்களும், அவர்களின் தியாகங்களும், புலிகளின் தலைவர் பிரபாகரனும், பணயம் வைக்கப்பட்டிருப்பது தான் பலருக்கும் உறுத்தலாக இருக்கின்ற விடயம்.

விடுதலைப் புலிகள், தமக்கு எதிரான எவரையும், வெளிப்படையாகத் தோற்கடிக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்ததில்லை.

இயக்கத்தில் இருந்து பிரிந்து போன கருணாவைப் புலிகள் ‘துரோகி’ என்று கூறியிருந்தாலும், பிரபாகரன் அவ்வாறு ஒருபோதும் வெளிப்படையாகக் கூறியதில்லை. அது ஒரு வகை நாகரிகம்; பண்பாடு. கருணா பற்றிய விமர்சனங்களைப் பொதுவெளியில் முன்வைப்பதற்கு, ஒருபோதும் பிரபாகரன் தயாராக இருக்கவில்லை.

அதுபோலவே, பெரும் நம்பிக்கையுடன் கட்டியெழுப்பப்பட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்து, தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தனி வழிக்குக் கொண்டு சென்ற அதன் தலைவர் ஆனந்தசங்கரி, புலிகளை எதிர்த்துக் கொண்டு, 2004ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட போது கூட, அவரை வெளிப்படையாகத் தோற்கடிக்க வேண்டும் என்று புலிகள் கோரவில்லை.

டக்ளஸ் தேவானந்தாவை, அரசியல் களத்தில் இருந்து அகற்றுவதற்குப் புலிகள் பல்வேறு இரகசியத் திட்டங்களை செயற்படுத்தினாலும் அவர் மீது பகிரங்க விமர்சனங்களைக் கூறி, நேரத்தை வீணடித்ததில்லை.

தனிநபர்களுக்கு எதிரான பிரசாரங்கள், அவர்களைப் பலப்படுத்தி விடக்கூடாது, பிரபலப்படுத்தி விடக் கூடாது என்பது, அதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம். தமக்குச் சமதையானவர்களாக, அவர்களைக் கருதச் செய்து விடும் என்பதாலும் கூட, அவ்வாறு நடந்து கொண்டிருக்கலாம்.

அதுபோலத் தான், சுமந்திரனைத் தோற்கடிப்பதற்கான வேலையைச் செய்வதற்கு, பிரபாகரனையோ, மாவீரர்களையோ பணயம் வைப்பது மிகையானது.

‘அவர்கள்’ யாரும் தனிமனிதர்களும் எவருக்கும் ஒப்பானவர்களும் அல்ல; அவர்களின் இலட்சியங்கள், தனிமனிதர்களை இலக்கு வைத்ததும் அல்ல. அவர்களின் உயர்ந்த இலட்சியத்தை, தனிமனிதர் ஒருவரை தோற்கடிப்பதற்காகப் பயன்படுத்திக் கொள்வதும், அந்தத் தோல்வியின் மூலம், அவர்களின் இலட்சியம் அடையப்பட்டு விட்டதாகத் திருப்தி காண முனைவதும், அபத்தமானது.

தனியரசுக்கான இலட்சியத்தைக் கொண்டவர்களின் தியாகத்தை, தனிநபர்களின் தோல்விக்குள் சுருக்கிக் கொள்ள முடியாது.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால், தேர்தலில் சுமந்திரன் வெற்றிபெற்று விட்டால், அதன் பின்னால் வரக்கூடிய ஆபத்தும் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

அவ்வாறான ஒரு நிலை வந்தால், அவமானப்பட்டு நிற்கப் போவது, இங்கு பணயம் வைக்கப்பட்டுள்ள, தலைவர் பிரபாகரனும் விடுதலைப் போராட்டமும் மாவீரர்களும் தான்.


அவர்களின் மீது பற்றுள்ளவர்களே தோற்கடியுங்கள் என்று அழைப்பு விடுத்தும், பயனற்றுப் போய் விட்டால், அது யாருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் என்பதைக் கவனத்தில் கொண்டிருக்க வேண்டும்.

அரசியல் என்பது சாக்கடை. அதில் சேறு குளித்தவர்களால், குருதியில் குளித்துப் போராடியவர்களின் தியாகங்கள் கொச்சைப்படுத்தப்படக் கூடாது.

அதைவிட, சுமந்திரன் வெற்றி பெற்று விட்டால், ஆயுதப் போராட்டத்தை ஆதரிக்கவில்லை என்பதை, அழுத்தமாகக் கூறுபவர், இன்னும் பலமடைந்து விடுவார். அது கூட, கவனத்தில் கொள்ளப்படவில்லை.

சுமந்திரன் தோற்கடிக்கப்பட வேண்டுமா-இல்லையா என்பதை விட, தமிழ்த் தேசியமும் தமிழரின் போராட்டமும் அதனை முன்னெடுத்தவர்களின் தியாகமும் போற்றப்பட வேண்டும்; பாதுகாக்கப்பட வேண்டும்.

அந்த கௌரவத்தைக் கெடுத்து விட்டு, தேர்தலில் ஒரு தனிமனித வெற்றியையோ, தோல்வியையோ கொண்டாட முனைவது மிகமிக அபத்தம்.



## வாழ்வியல் தரிசனம்

வாழும்போது சண்டித்தனம் பேசுவார்கள்; கண்களை மூடும் தருணத்தில், ஞானம் தேடுவார்கள்; கடவுளைக் கூப்பிடுவார்கள். “நான் என்ன செய்தேன், எதற்காக வருந்துகின்றாய்” என்று கேள்வியும் கேட்பார்கள்.

கடவுள் ஒருபோதும் வந்து, குற்றப்பத்திரிகை வாசிக்க மாட்டார். ஆனால், ஒருபோதும் அவரது நீதி, மாறுவது கிடையாது. எல்லா உயிர்களுக்கும் இறுதிநாள் வரும்.

கடவுள் நேரடியாகக் காட்சி கொடுக்காது விட்டாலும், நல்ல அறிவை ஊட்டும் சந்தர்ப்பங்களையும் படிப்பினைகளையும் உருவாக்காமல் விட்டதுமில்லை; பலரும் அதைத் தொட்டதுமில்லை.

கோவில்களில் ஆணவத்துடன் பிரச்சினைகள் செய்வார்கள்; திருமணச் சடங்கிலும் பேசாமல் இருப்பதில்லை. சாதி பற்றி வீம்பு பேசி, நல்ல காரியங்களைக் குழப்ப எத்தனிப்பார்கள். ஏன், இறுதிச் சடங்குகளின் போது கூட, சோகத்துடன் இருக்கும் உறவினர்களுடன் வாதம் செய்வார்கள்.

இப்படி எல்லாம் கூத்தாடிவிட்டுத்தான், “நான் என்ன செய்தேன்” என்று இறுதிக் காலத்தில், கடவுளிடம் கேள்வி கேட்பார்கள்.

ஆணவம், மமதை ஆகியவை அறிவை மறைக்கும். எதையும் அறியாமலும் உணராமலும் மீளா உறக்கம் கொள்ளவும் முடியாது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### பச்சங்குளநீர் வாய்க்காலில் முதலைகளின் ஊடாட்டத்தால் அச்சம்

திருகோணமலை, மூதூர் கமநல சேவைகள் நிலையத்துக்கு உட்பட்ட பச்சங்குள நீர் வாய்க்காலில், முதலைகளின் ஊடாட்டம் காணப்படுவதால், இப்பிரதேசத்தில் விவசாயச் செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகள் பெரும் அச்சம் அடைந்துள்ளனர்.

பச்சங்குளம் அமைந்திருக்கும் பிரதேசத்தில் பிரப்பம் மரங்கள் வளர்ந்து காணப்படும் வாய்க்கால் பகுதி ஒன்றிலேயே, முதலைகள் அதிகளவில் காணப்படுகின்றன.

இந்த முதலைகள், இரவு நேரங்களில் வயல் வெளிகளில் பயிர்களை நாசம் செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முதலைகளில் இத்தகைய ஊடாட்டங்களால், வயல்வெளிகளை அண்டிய பிரதேசங்களில் மக்கள் நடமாடுவதற்கும், கால்நடைகளை மேச்சலுக்கு விடுவதற்கும் மக்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

மேலும், காலை, மாலை வேளைகளில், நெற்செய்கை நிலங்களைப் பார்வையிடச் செல்லும் விவசாயிகள், வயல் வெளியில் உலாவுவதற்கும் வயல் வெளியில் வேலை செய்வதற்கும் இம்முதலைகளின் ஊடாட்டத்தால் அச்சம் கொண்டுள்ளனர். இந்நிலையில், பிரப்பம் மரங்கள் வளர்ந்து காடு மண்டிக் காணப்படும் வாய்க்கால் பகுதியில், மரங்களை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுள்ளார்கள்.

–எப். முபாரக்



# வியூகங்களை விட ‘தெரிவு’ முக்கியமானது

மொஹமட் பாதுஷா

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல், இலங்கை வாக்காளர்கள் அனைவருக்கும் முக்கியமானது. அதேவேளை, முஸ்லிம் சமூகம் அதிக அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டிய ஒரு தேர்தலாக, இது இருக்கின்றது. இந்தத் தேர்தலின் தார்ப்பரியத்தை, ஆழமாக நோக்குபவர்கள், இலகுவில் புரிந்து கொள்வார்கள்.

கொரோனா வைரஸ் நோய்த்தொற்றால் ஏற்பட்ட நெருக்கடிச் சூழலில், இடம்பெறுகின்ற வாக்கெடுப்பு என்பதற்கு மேலதிகமாக, ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று, ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்பட்ட பின்னர், நாட்டின் ஆட்சிக் கதிரையில் எந்தப் பெரும்பான்மைக் கட்சியை அமர்த்தப் போகின்றோம், அந்த நாடாளுமன்றத்தில் எத்தனை முஸ்லிம் பிரதிநிதித்துவங்களை உறுதிப்படுத்தப் போகின்றோம், அவர்களின் தராதரம் எப்படி இருக்கப் போகின்றது என்பதையெல்லாம், ஒரு சமூகமாக, முஸ்லிம்கள் தீர்மானிக்க வேண்டிய ஒரு காலகட்டமாக, இத்தேர்தலைக் குறிப்பிடலாம்.

நாம், நமது சொந்த வாழ்வில், ‘தெரிவு’களுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுப்பதுண்டு. ஒரு பொருளைக் கொள்வனவு செய்கின்ற போது, அதன் தரம், அதன் பாவனைக்காலம் என்பது பற்றி, நிச்சயம் சிந்திப்போம். ‘இவ்வளவு நேரத்தையும் பணத்தையும் செலவு செய்து கொள்வனவு செய்யும் அளவுக்கு, அப்பொருள் பெறுமதி வாய்ந்ததா?’ என்பதையும் பரிசீலித்துப் பார்ப்பதற்கு நாம் தவறுவதில்லை.

இந்த வரிசையில், ஒரு நல்ல காலணியைக் கொள்வனவு செய்வதற்காக, பல கடைகள் ஏறி இறங்குகின்றோம். தரமான பிஸ்கட்டை வாங்குவதற்காக, அது விற்பனை செய்யப்படும் கடையைத் தேடிப் போகின்றோம். அது அவசியமானதும் கூட; ஏனெனில், அதன் பலன்களையோ எதிர்விளைவுகளையோ, நாம் நேரடியாக அனுபவிப்போம் என்ற எச்சரிக்கை உணர்வு, எப்போதும் நம்முள்ளே இருந்து கொண்டே இருக்கின்றது.

ஒரு பொருளுக்காக, நாம் இத்தனை தூரம் சிரத்தை எடுத்துக் கொள்கின்றோம் என்றால், இந்த நாட்டை, அடுத்துவரும் ஐந்து வருடங்களுக்கு யார் ஆளப் போகின்றார்கள், அதில் முஸ்லிம் சமூகத்தின் வகிபாகம் என்னவாக இருக்கப் போகின்றது, எப்படிப்பட்ட அரசியல் ஆளுமைகளை, நாடாளுமன்ற உறுப்பினர்களாக முஸ்லிம்கள் தெரிவு செய்ய வேண்டும் என்ற விவகாரங்களில் எல்லாம், மேற்குறிப்பிட்ட சொந்த விவகாரங்களை விடவும் அதிக அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது.

நடைமுறை வாழ்க்கையில், வெளிப்படையாக நோக்குகின்ற போது, அரசியலும் ஆட்சியதிகாரமுமே மக்களின் தலைவிதியை எழுதிச் செல்கின்றன. பெரும்பான்மைச் சமூகமாக இருந்தால், எந்தப் பெருந்தேசியக் கட்சிக்கு மக்கள் வாக்குப் போட்டாலும் பரவாயில்லை. ஒப்பீட்டளவில் அதிக சிங்கள எம்.பிக்கள் இருப்பார்கள். என்ன நடந்தாலும், சிங்கள சமூகத்தின் சுய கௌரவம், உரிமை, அரசியல் அபிலாசைகள் புறந்தள்ளப்பட மாட்டா.

ஆனால், சிறுபான்மைச் சமூகங்களான தமிழர்களும் முஸ்லிம்களும் அதற்காகப் பாடுபட வேண்டியிருக்கின்றது. ‘இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன’ என்ற மனோநிலையில் இருக்க முடியாது.

நம்மை ஆளப் போகின்றவர்கள் யார், நம்மை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யப் போகின்றவர்களின் இலட்சணங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை, உடனடியாகத் தீர்மானித்தாக வேண்டும்.

‘நமது ஒரு வாக்கால், என்ன நடந்து விடப் போகின்றது’ என்ற எண்ணம் பொதுவாகவே எல்லோருக்கும் இருக்கின்றது. இது வாக்குகளின் கனதியைக் குறைமதிப்பீடு செய்கின்ற செயற்பாடாகும்.

எனவே, இலங்கையின் அரசியல் நிலைவரம், கடந்தகாலத் தேர்தல்களில் முஸ்லிம் சமூகம் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் ஆகிவற்றின் அடிப்படையில், தீர்மானங்களை எடுப்பது அவசியம். யாரைக் கொண்டு, இந்த நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை நிரப்ப வேண்டும் என, முஸ்லிம்கள் கருதுகின்றார்கள் என்பதை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பமே, நாடாளுமன்ற பொதுத் தேர்தல் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

பெரும் இழுபறிகளுக்குப் பிறகு, ஓகஸ்ட் ஐந்தாம் திகதி நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தலில், 22 தேர்தல் மாவட்டங்களில் இருந்து, அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்களில் நாடு முழுவதும் 7,452 பேர் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். இவர்களுக்குள் பெரும்பான்மைக் கட்சிகளில் இணைந்தும், சொந்தக் கட்சிகளில் தனித்தும் கணிசமான முஸ்லிம் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

முன்னைய நாடாளுமன்றங்களில் எம்.பிக்களாக, அமைச்சர்களாக, பிரதியமைச்சர்களாக இருந்து, முஸ்லிம் சமூகத்துக்கு உரிமை விடயங்களிலோ, குறைந்தபட்சம் அபிவிருத்தி அரசியலிலோ எதையுமே சாதிக்காமல், வெறுமனே ‘வாயால் வடைசுட்டு’ காலத்தை வீணடித்தவர்களை, மீண்டும் வேட்பாளர்களாக மக்கள் முன் நிறுத்தியிருக்கக் கூடாது. உண்மையில், மக்களுக்காகப் பாடுபட்டவர்களைத் தெரிந்தெடுத்தே வேட்பாளர்களாகக் களமிறக்கியிருக்க வேண்டும்.

அதேபோன்று, முஸ்லிம் அரசியல் பிரதிநிதித்துவத்துக்கு இருக்கவே முடியாத பண்புகளான மது, மாது, ஊழல், போதைப்பொருளுடன் தொடர்பு, பதவி ஆசை, பணவெறி, குறுகிய மனப்பான்மை, மக்களை மதியாமை போன்ற குணாதிசயங்கள் உள்ளவர்களைக் களமிறக்கக் கூடாது என்ற சிவில் சமூகத்தின் நிலைப்பாட்டை, இப்பத்தியில் பல தடவை அழுத்தமாக வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

> **“ஏந்தப் பெருந்தேசியக் கட்சிக்கு சிங்கள மக்கள் வாக்குப் போட்டாலும், ஒப்பீட்டளவில் அதிக சிங்கள எம். பிக்கள் இருப்பார்கள். என்ன நடந்தாலும், சிங்கள சமூகத்தின் சுய கௌரவம், உரிமை, அரசியல் அபிலாசைகள் புறந்தள்ளப்பட மாட்டா**

ஆனால், பல மாவட்டங்களில் இந்தக் கோரிக்கைகளை முஸ்லிம் கட்சிகளோ, பெரும்பான்மைக் கட்சிகளோ, கிஞ்சித்தும் கருத்தில் எடுக்கவில்லை என்பது, சில வேட்பாளர்களைப் பார்க்கின்ற போது புலனாகின்றது.

முஸ்லிம் சமூகத்தின் எதிர்பார்ப்பை, அரசியல் தலைமைகள் எந்தளவுக்குப் பொருட்டாக மதிப்பதில்லை என்பதற்கு இதுவும் ஓர் உதாரணமாகும். ஆயினும், அதையும் தாண்டி, சில ‘நம்பிக்கையூட்டும் வேட்பாளர்கள்’ களத்தில் இல்லாமலும் இல்லை.

இந்தத் தேர்தலில், பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசிய கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி போன்ற பெரும்பான்மைக் கட்சிகள் போட்டியிடுகின்றன. அத்துடன், கடந்த தேர்தலில் இணைந்திருந்த சஜித், ரணில் ஆகிய இருவரும், இன்று இரு சின்னங்களின் கீழ் களமிறங்கியுள்ளனர்.

இதேவேளை, பிரதான முஸ்லிம் கட்சிகளும் சிறு முஸ்லிம் கட்சிகளும் இந்தத் தேர்தலில் தனித்தும் கூட்டாகவும் களமிறங்கி இருக்கின்றன. ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் ரிஷாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியும் தலா ஒவ்வொரு மாவட்டங்களிலும் தனித்தும், ஒரு மாவட்டத்தில் தமக்குள் இணைந்தும் போட்டியிட்டாலும் ஏனைய மாவட்டங்களிலும் சஜித் பிரேமதாஸவின் தொலைபேசிச் சின்னத்திலேயே வேட்பாளர்களை நிறுத்தி இருக்கின்றன.

ஏ.எல்.எம். அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் கட்சியானது பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிடும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், கடைசிக் கட்டத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளால் சொந்தச் சின்னமான ‘குதிரை’யில் அக்கட்சி தனித்துப் போட்டியிடுகின்றது. கிழக்கில் அம்பாறை (திகாமடுல்ல), திருமலை மாவட்டங்களுக்கான வேட்புமனுக்களை, இக்கட்சி தாக்கல் செய்திருந்த நிலையில், திருமலையில் வேட்புமனு நிராகரிக்கப்பட்டு, இது தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணையில் உள்ளது.

இதற்குப் புறம்பாக, பொலன்னறுவை மாவட்டத்திலும் தே.கா, வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது.

கடந்த உள்ளூராட்சித் தேர்தல் காலத்தில், மு.காவின் முன்னாள் செயலாளர் எம்.ரி. ஹசன்அலியும் அதே கட்சியின் தவிசாளராக இருந்த பசீர் சேகுதாவூத் ஆகிய இருவராலும் பொறுப்பேற்கப்பட்ட ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு, இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடுகின்றது. பசீரும் முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ்வும் இதன் முக்கிய வேட்பாளர்களாக உள்ளனர். இது தவிர, நேரடியாகப் பெரும்பான்மைக் கட்சிகளிலும் முஸ்லிம்கள் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாறு, ஒவ்வொரு கட்சியும் அரசியல் தலைமையும் ஒவ்வொரு வியூகத்தை வகுத்திருக்கின்றன. இந்த வியூகங்கள் குறித்த பொய்யான கற்பிதங்களை முஸ்லிம் அரசியல்வாதிகள் சொல்வதுடன், ‘நிச்சயம் இது வெற்றிபெறும்’ என்று, ஆதாரமற்ற விதத்தில், நிரூபிக்க முனைவதையும் அடிக்கடி காணக் கூடியதாக இருக்கின்றது. இதற்கு எந்த முஸ்லிம் அணியும் விதிவிலக்காக இருக்க முடியாது.

உண்மையாகச் சொல்லப் போனால், முஸ்லிம் சமூகத்தின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் வகையிலேயே, வியூகங்கள் வகுக்கப்பட்டிருக்க வேண்டும். அந்த வியூகம் தேசிய மட்டத்தில் சாத்தியமான எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்ற வாய்ப்புகளைப் பயன்படுத்தி, முஸ்லிம் எம்.பிக்களை உறுதிப்படுத்துவதை மட்டுமே இலக்காகக் கொண்டதாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில், உள்ளக விமர்சனங்களைக் கடந்து, முஸ்லிம் சமூகத்தின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டியது அவசியமாகவுள்ளது.

அதற்கமைய, எந்த மாவட்டத்தில், பிரதேசத்தில் எந்த முஸ்லிம் கட்சிக்கோ, வேட்பாளருக்கோ வெற்றிவாய்ப்பு அதிகமுள்ளதோ அந்தத் தரப்புக்கு மற்றைய முஸ்லிம் கட்சி விட்டுக் கொடுக்க வேண்டும்.

இன்னுமோர் இடத்தில், மற்றைய முஸ்லிம் கட்சி ஏற்கெனவே விட்டுக் கொடுத்த கட்சிக்கு, இடம்விட்டு ஒதுங்கி நிற்கலாம். அதற்கேற்றாற்போல் சிறந்த வேட்பாளர்களையும் நிறுத்தியிருக்கலாம்.

இப்படிச் செய்திருந்தால், உயர்ந்தபட்சமான முஸ்லிம் எம்.பிக்களைப் பெறுவதற்குச் சாத்தியமான களநிலைமைகள் கட்டமைக்கப்பட்டு இருப்பதுடன், முஸ்லிம் வேட்பாளர்களிடையேயான முரண்நிலையையும் தவிர்த்திருக்கலாம். ஆனால், அது நடக்கவில்லை. இதுவும் நாம் எதிர்பார்த்ததுதான்!

ஏனெனில், முஸ்லிம் கட்சிகள், தலைவர்கள், ஏனைய முஸ்லிம் அரசியல்வாதிகள் மத்தியில் ‘நீயா நானா போட்டிதான்’ நிலவிக் கொண்டிருக்கின்றது. எந்தக் கட்சி அதிக எம்.பிக்களை எடுப்பது என்ற பந்தயமும் யார் எந்த மாவட்டத்தில், ஊரில் வெல்வது என்ற பனியுத்தமும் உள்ளன.

அத்துடன், கடந்த காலங்களில் ஒன்றுமே செய்யாத முன்னாள் எம்.பிக்களுக்கு மீண்டும் அந்தப் பதவியில் இருக்க வேண்டும் என்ற வேட்கை ஏற்பட்டிருப்பது மட்டுமன்றி, அரசியல் அறிமுகமற்ற, ‘உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கே பொருத்தமானவர்’ எனத் தோன்றும் பல புது அறிமுக வேட்பாளர்களுக்கும் எம்.பி ஆசை வந்து விட்டது.

> **“‘இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன’ என்ற மனோநிலையில் இருக்க முடியாது. ‘நமது ஒரு வாக்கால், என்ன நடந்து விடப் போகின்றது’ என்ற எண்ணம், வாக்குகளின் கனதியைக் குறைத்து விடுகின்ற செயற்பாடாகும்**

> **“ஏனெனில், உள்ளக விமர்சனங்களைக் கடந்து, முஸ்லிம் சமூகத்தின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டியது அவசியமாகவுள்ளது. முஸ்லிம்கள் தமது ‘தெரிவில்’ பிழை விட்டுவிடக் கூடாது. அதைத் திருத்த 05 வருடங்கள் காத்திருக்க நேரும்**

இந்தப் பின்னணியிலேயே ஆளுக்கொரு வியூகத்தை முஸ்லிம் தலைமைகள் வகுத்துள்ளன. சமூகத்தின் வெற்றிக்கான வியூகங்கள் என்று இவை சொல்லப்பட்டாலும் நிஜத்தில் அவ்வாறான பண்புகளை அவ்வியூகங்கள் கொண்டிருக்கவில்லை என்பதை, முஸ்லிம் சமூகம் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

சில வருடங்களுக்கு முன்புவரை, ஒரு பெரும்பான்மைக் கட்சிக்கும் முஸ்லிம் கட்சிக்கும் இடையில் இருந்த போட்டி, பின்னர் இரு சகோதர முஸ்லிம் கட்சிகளுக்கு இடையிலான கௌரவச் சண்டையாக உருமாறியிருந்ததை நாமறிவோம். இது இன்னும் ஒருபடி கீழிறங்கி, ஒரு சில குறிப்பிட்ட முஸ்லிம் அரசியல் அணிகளுக்கு உள்ளேயே விருப்புவாக்குகளுக்கான கழுத்தறுப்புகளும் போட்டியும் உருவாகியிருப்பது நல்ல சகுணங்களல்ல.

மேற்சொன்ன வியூகங்கள் மட்டுமன்றி, இரண்டு முஸ்லிம் தலைவர்கள் முரண்பட்டுக் கொள்வதைப் பார்த்து, கைதட்டும் ஒரு சமூகமும் இதற்கு மறைமுகக் காரணம் எனலாம். அதற்காக, அவ்வியூகங்கள் தோற்றுவிடும் என்று இக்கட்டுரை கூற வரவில்லை. அரசியல் கட்சிகளின் தனிப்பட்ட வியூகங்கள், ஒரு சமூகமாக முஸ்லிம்கள் தோற்றுவிடக் கூடாது என்பதை வலியுறுத்தி நிற்கின்றது.

அப்படியென்றால், முஸ்லிம் கட்சிகளும் அரசியல்வாதிகளும் ஆரோக்கியமான விதத்தில் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்வதுடன், ஒவ்வொரு தனிப்பட்ட வேட்பாளரும் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும்.

புதிதுபுதிதாக மக்களை எவ்வாறு ஏமாற்றலாம் என்று சிந்திக்காமல், இனியாவது தம்மைத் திருத்தி, முஸ்லிம் சமூகத்துக்குச் சேவையாற்றுவதற்கான விஞ்ஞாபனங்களைக் கூறி, வாக்குக் கேட்பதற்குப் பழகிக் கொள்ள வேண்டும்.

மறுபக்கத்தில், தேர்தல் பிரசாரங்கள் இடம்பெறும் இக்கால கட்டத்தில், மேலெழுந்தவாரியாகச் சிந்திக்காமல் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய பொறுப்பு, ஒவ்வொரு இலங்கை முஸ்லிமுக்கும் இருக்கின்றது. வெற்று வாக்குறுதிகளுக்காக, உணர்ச்சிப் பேச்சுக்களுக்காக, பசப்பு வார்த்தைகளுக்காக, உற்சாகப் பாடல்களுக்காக, பழக்கதோசத்துக்காக, பிரதேசவாதத்துக்காக, ‘தலைவர் செய்தால் எல்லாம் சரியாகவே இருக்கும்’ என்ற கண்மூடித்தனத்தின் அடிப்படையில், எந்தக் கட்சிக்கு, யாருக்கு, வாக்களிப்பது என்ற முடிவை, இனியும் எடுக்கக் கூடாது.

அவர்களின் வியூகங்கள் எவ்வாறிருந்தாலும், எக் காரணத்துக்காகவும் முஸ்லிம்கள் தமது ‘தெரிவில்’ பிழை விட்டுவிடக் கூடாது. அதைத் திருத்த இன்னும் ஐந்து வருடங்கள் காத்திருக்க நேரும்.

---

பொதுத் தேர்தல்:

## சமூக வலைத்தள மோதல்கள்



> **“ஏந்தக் கட்சிக்காகவும் வேட்பாளருக்காகவும் ஏந்தப் பொதுமகனும் பகிரங்கமாகச் சண்டைபிடிக்க வேண்டிய அவசியம் இல்லை**

கொவிட்-19 தொற்றுப் பரவுகையின் ஆபத்தும் அச்சமும் இன்னும் முற்றாக நீங்காமையால், தேர்தலை எதிர்கொள்வதற்கான உற்சாக உணர்வு, மக்கள் மனங்களில் இன்னும் பெரிதாக ஏற்படவில்லை. அதற்கு இன்னும் சில நாள்கள் செல்லலாம். அத்துடன், தேர்தல் பிரசாரங்களும் இப்போதுதான் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன.

இவ்வாறான சூழலில், பொதுவாக நாட்டிலும் விசேடமாக முஸ்லிம்கள் வாழும் பகுதிகளிலும் அதிர்ஷ்டவசமாக இதுவரை பாரிய தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. ஆனால், சமூக வலைத்தளங்களில் அத்துமீறிய வாதப் பிரதிவாதங்களும், முகநூல் சண்டைகளும் இடம்பெறுவதைக் காண முடிகின்றது.

தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடும் ‘கபே’ எனப்படும் நீதியானதும் சுதந்திரமானதுமான மக்கள் இயக்கம், கடந்த இரு தினங்களுக்கு முன்னர் வெளியிட்டுள்ள அறிக்கை இங்கு கவனிக்கத்தக்கது.

நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு, திகாமடுல்ல (அம்பாறை) தேர்தல் மாவட்டத்தில் மூன்று பிரதேசங்களைப் பெயர் குறிப்பிட்டுள்ள ‘கபே’ அமைப்பு, அப்பிரதேசங்களை மய்யமாகக் கொண்ட அரசியல் கட்சி, ஆதரவாளர்களுக்கு இடையில் வன்முறைகள் அதிகரித்து வருவதாகச் சுட்டிக்காட்டி இருக்கின்றது. அத்துடன், வெறுப்புப் பிரசாரங்கள் பற்றியும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், பாதுகாப்பை அதிகரிப்பதற்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இது முக்கியமான விடயமாகும். இத்தகைய நிலைமை, அம்பாறை மாவட்டத்தில் மட்டும் இடம்பெறுவதாகச் சொல்ல முடியாது. எனவே, முஸ்லிம் பகுதிகளில் தேர்தல் வன்முறைகள் தவிர்க்கப்பட வேண்டும். அதேநேரம், சமூக வலைத்தள முரண்பாடுகள், ஒரு கட்சிக்கு வக்காளத்து வாங்கும் பதிவுகள், அதனூடாக நிகழும் அசிங்கங்கள் தொடராமல் இருப்பதற்கும் முஸ்லிம் சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

ஒரு நிலையானதும் ஆரோக்கியமானதுமான அரசியல் முன்னெடுப்புக்குக் காத்திரமான கருத்துகள் பரிமாறப்படுவது அவசியமானது. ஆனால், இவை பக்குவமானவையாக, ஓரளவுக்கு நியாயமானவையாக, நாசுக்கானவையாக இருக்க வேண்டும்.

ஆனால், இந்த வரைமுறைகளை எல்லாம் மீறப்படுவதைக் காண முடிகின்றது. ஒரு கட்சி சார்பான கருத்துப் பதிவேற்றங்கள், அதற்குச் சார்பான தொடர் வாதங்கள், மறுகட்சி வேட்பாளரை வசைபாடுதல், அடிப்படையற்ற கருத்துகளை வெளியிடுதல், நாகரிகமற்ற வார்த்தைப் பிரயோகங்கள் என முகம் சுழிக்கும் வகையிலான பல கைங்கரியங்கள் நடந்தேறுகின்றன.

ஒரு விவகாரம் அல்லது பேசுபொருள், இரண்டு கட்சிகளைச் சேர்ந்த இரண்டு ஆதரவாளர்கள், தமக்கிடையே முகநூலில் மோதிக் கொண்டாலும், சமூக வலைத்தளம் என்பது, ஒரு பொதுவெளி என்பதை மறந்து விடக் கூடாது.

இந்தப் போக்குகள் மாற வேண்டும். எந்தக் கட்சிக்காகவும் அரசியல்வாதிக்காகவும் வேட்பாளருக்காகவும் எந்தப் பொதுமகனும் பகிரங்கமாக முரண்படவோ, சண்டைபிடிக்கவோ வேண்டிய அவசியம் இல்லை என்பதே பொதுவான நிலைப்பாடாகும்.

# ‘ஆராய்ச்சிமணி போல் அலைபேசி’



எம். செல்வராஜா

## உங்கள் குறைகளை 24 மணிநேரமும் முறையிடலாம்

## வாக்குகளைச் சிதறடிப்பதற்கு முயற்சி

## முகவர்கள் பலர் களமிறக்கம்

## 24 பக்கங்கள் அடங்கிய விவரக்கொத்தை மக்களிடம் கையளித்துள்ளேன்

## மக்கள் நலன்சார் விடயங்களில் அதிக கவனம்

“தமிழ் பேசும் இளைஞர், யுவதிகளுக்கான வாழ்வாதாரங்களை ஏற்படுத்தி, அவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தி, அவர்களைக் கௌரவமாகவும் ஆரோக்கிய சூழலிலும் வாழவைப்பது உள்ளிட்ட 15 அதிமுக்கியமான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு, எமது மக்களின் ஆணையைக் கோரி, மீண்டும் தேர்தலில் களம் இறங்கியிருக்கிறேன்” என்று, ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில், பதுளை மாவட்டத்தில் இலக்கம் 1இல் போட்டியிடும் வேட்பாளர் அ.அரவிந்தகுமார் தெரிவித்தார். அவர், தமிழ்மிரருக்குத் தெரிவித்த கருத்துகள், கேள்வி-பதில் வடிவில் கீழே தருகின்றோம்.

**கேள்வி: நீங்கள், நடைபெறவுள்ள தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர், பதுளை மாவட்டத்துக்குச் செய்யவுள்ள பணிகள் தொடர்பாக எத்தகைய திட்டத்தை வகுத்துள்ளீர்கள், அல்லது மக்கள் முன்னிலையில் முன்வைத்துள்ளீர்கள்?**

பதில்: பதுளை மாவட்டத்தை முழுமையாக உள்ளடக்கிய வகையில், கணினி பயிற்சி நிலையங்கள், முன்பள்ளிக் கூடங்கள் போன்றவற்றை அமைத்தல்; மாவட்டத்தில், பரவலாகத் தொழிற்பயிற்சி நிலையங்களை ஏற்படுத்துதல்; கல்வித்துறையைத் துரிதமாக மேம்படுத்தல்; வீடமைப்புத் திட்டங்களை உருவாக்குவதுடன், குடியிருப்புகள் அனைத்துக்கும் வீட்டுரிமை, காணியுரிமை ஆகியவற்றைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகளை எடுத்தல்; தோட்டவாரியாக, சுத்தமான குடிநீரை வழங்குவதற்கான திட்டங்களை முன்னெடுத்தல்; பெருந்தோட்ட கோவில்களை முழுமைப்படுத்தல்; பெருந்தோட்டப் பகுதிகளில் விளையாட்டுத்துறையை மேம்படுத்தல்; பெருந்தோட்டப் பாதைகளை முழுமைப்படுத்தி, அரச போக்குவரத்துச் சேவைகளை விஸ்தரித்தல்; போஷாக்குத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்; பெருந்தோட்ட இளைஞர், யுவதிகளுக்கு அரச தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்க முயற்சித்தல்; பெருந்தோட்டப் பகுதிகளில் சுகாதாரத்துறையை மேம்படுத்தல்; தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமை, பாதுகாப்பு போன்றவற்றைப் பலப்படுத்துதல்; பதுளை மாவட்டத்தில் எமது சமூகத்துக்கென்று, இரண்டு பிரதேச சபைகளை உருவாக்குதல்; மாவட்டத்தின் மக்கள் மன்றங்களில், எமது சமூக இளைஞர், யுவதிகளை அதிகளவில் ஈடுபடுத்துதல் போன்ற வேலைத்திட்டங்கள் என் சிந்தனையில் பரிணமித்துக் கொண்டுள்ளன. இத்தகைய வேலைத்திட்டங்களைத் துரிதமாக முன்னெடுக்க, எமது மக்களின் பேரங்கிகாரம் தேவைப்படுகின்றது. அந்த அங்கிகாரத்தை, அமோகமாகப் பெற்றுக்கொள்ளவே, மீளவும் தேர்தலில் களம் இறங்கியுள்ளேன்.

**கேள்வி: நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக ஏற்கெனவே இருந்துள்ளீர்கள். இக்காலப்பகுதியில் எத்தகைய மக்கள் பணிகளை ஆற்றியுள்ளீர்கள்?**

பதில்: நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த நான்கு வருடங்களில், எமது மக்களின் மேம்பாடுகளுக்கு ஆற்றிய பணிகளை, 24 பக்கங்கள் அடங்கிய விவரக் கொத்தாகத் தயாரித்து, எமது மக்களிடம் சமர்ப்பித்துள்ளேன். 2015ஆம் ஆண்டு பதுளை மாவட்டத்தின் தமிழ் உறுப்பினர்கள் பெற்ற வாக்குகளை விட, ஆகக் கூடிய வாக்குகளை வழங்கி, என்னை வெற்றிபெற வைத்த, எம்மக்களின் நம்பிக்கை வீண் போகாத வகையில், சேவையாற்றி இருக்கின்றேன்.

> **“ஏமது சமூகத்தின் பெறுமதிமிக்க வாக்குகளைச் சிதறடிப்பதற்கும் பெறுமதியற்றதாக்குவதற்கும் சிலர் கங்கணம் கட்டிச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இத்தகையவர்களுக்கு, தகுந்த பாடத்தை எம்மக்கள் புகட்ட வேண்டும். தான் வெற்றி பெறமாட்டேன் என்று தெரிந்திருந்தும் ஒப்பந்த அடிப்படையிலும் ஏஜென்டுகளாகவும் இருந்து செயற்படுவர்களை இனங்கண்டு, சமூகத்திலிருந்து அத்தகையவர்கள் ஓரங்கட்டப்படல் வேண்டும்**

எம் மக்கள், என்னை நம்பித் தேர்ந்தெடுத்து, கடந்த முறை நாடாளுமன்றத்துக்கு அனுப்பியதற்குரிய பயனைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றேன். அவையாவற்றையும் ஆதாரபூர்வமாக, விவரக்கொத்தாகச் சமர்ப்பித்து இருக்கின்றேன். நடைபெறப் போகும் தேர்தலிலும், எமது மக்கள், மீளவும் என்னை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவார்களென்ற அபார நம்பிக்கை எனக்கிருக்கின்றது. எம் மக்கள் மீது, நான் வைத்திருக்கும் நம்பிக்கை, என்றும் அவநம்பிக்கையாக வீண்போகாது.

உலக வங்கித் திட்டத்தின் கீழ், பெருந்தோட்டப் பகுதிகளில் பாரிய பாலங்கள், குடிநீர் விநியோகத் திட்டங்கள், மலசல கூடங்கள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளையும் மேற்கொண்டிருந்தேன். உலக வங்கித் திட்டத்தின் கீழ், பெருந்தோட்டப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட வரலாற்று ரீதியிலான முதன்மைத் திட்டங்களே இவைகளாகும். இத்திட்டத்தின் மூலமாக, எட்டுக் கோடியே ஐம்பது இலட்சம் ரூபாய் செலவு செய்யபட்டுள்ளது. இவ்வாறான திட்டங்கள், நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் என்ற நிலையை மாற்றி, பதுளை மாவட்ட தோட்டப்புறங்களுக்கும் அவற்றை விஸ்தரித்துள்ளேன்.

பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டு வரும் மாணவர்களுக்கு, மாதாமாதம் வழங்கப்பட்டதுடன் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும் உதவித் தொகையாக 284 பேருக்கு, இரண்டு கோடியே நான்காயிரம் ரூபாய் இதுவரையிலும் வழங்கியுள்ளேன். இத்திட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் இருந்து வருகின்றது.

பதுளை மாவட்ட தமிழ்ப் பாடசாலைகளின் மேம்பாடுகளுக்கென இரண்டு கோடி ரூபாயை அண்மித்த வகையில், செலவு செய்யப்பட்டுள்ளது. மின்சார வசதிகளைப் பெற்றுக்கொடுக்கும் முகமாக ஒரு கோடியே அறுபத்து மூன்று இலட்சத்து ஐம்பத்து நான்காயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாகப் பாடசாலைகள், சிறுவர் காப்பகங்கள் ஆகியவற்றுக்குப் பெற்றுக்கொடுக்கப்பட்ட நிதி 12 இலட்சத்து 33 ஆயிரத்து ஐநூறு ரூபாயாகும்.

எனது, ஏற்பாட்டில் வீடமைப்பு அமைச்சின் ஊடாக, ஹப்புத்தளை, பூனாகலை உடஹேன, மக்கள்தெனிய ஆகிய பெருந்தோட்டங்களில் 77 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு, இவை இறுதித் தறுவாயை அடைந்துள்ளன.

கொரோனா வைரஸ் தொற்று காலப்பகுதியில், மக்களுக்கு விநியோகிப்பதற்கென 22,610 கிலோகிராம் உலர் உணவுப் பொருள்களுக்கு ரூபாய் 20 இலட்சத்து 92 ஆயிரத்து 250 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இதற்குப் புறம்பாக, ஊரடங்கு வேளையில் கொழும்பில் நிர்க்கதியான இளைஞர், யுவதிகளின் வங்கிக்கணக்கில் ஒரு இலட்சத்து பன்னிரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் தனிப்பட்ட வகையிலான நிதியுதவிகளையும் வழங்கியுள்ளேன்.

கடந்த நான்கு வருடங்களாக, அரச, சமூக அமைப்புகளும் தனிப்பட்ட நிதி வள்ளல்கள் ஊடாக, பதுளை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மேம்பாட்டு வேலைத்திட்டங்களில் இன்னும் சிலவற்றை உங்கள் முன்வைக்கின்றேன்.

ஹப்புத்தளை பகுதியில் 10 கோடியே 58 இலட்சம் ரூபாய், ஹாலி -எல பகுதியில் ஏழு கோடியே 29 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய், ஹல்துமுல்லை பகுதியில் ஐந்து கோடியே 46 இலட்சம் ரூபாய், ஊவா பரணகம பகுதியில் நாலு கோடியே 49 இலட்சம் ரூபாய், பசறைப் பகுதியில் எட்டுக் கோடியே 28 இலட்சம் ரூபாய், எல்லப் பகுதியில் மூன்று கோடியே 64 இலட்சம் ரூபாய், லுணுகலை பகுதியில் ஐந்து கோடியே ஏழு இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய், வெலிமடைப் பகுதியில் ஐந்து கோடியே 18 இலட்சம் ரூபாய், பண்டாரவளைப் பகுதியில் இரண்டு கோடியே 81 இலட்சம் ரூபாய், பதுளைப் பகுதியில் மூன்று கோடியே 53 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய், சொரணதொட்ட பகுதியில் ஒரு கோடியே 59 இலட்சத்து ஆறாயிரம் ரூபாய், மீகாகியுல பகுதியில் 77 இலட்சம் ரூபாய், கந்தகெட்டிய பகுதியில் 77 இலட்சம் ரூபாய், மின்சாரம் பெற்றுக்கொள்வதற்கென வழங்கப்பட்ட நிதி 11 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாய், இந்து கலாசாரத் திணைக்களத்தினூடாக கோவில்களுக்கு வழங்கப்பட்ட நிதி இரண்டு கோடி ரூபாய், பல்கலைகழத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டு வரும் மாணவர்களுக்கான உதவித்தொகை இரண்டு கோடியே 4 ஆயிரம் ரூபாய், தேசிய வீடமைப்பு அதிகார சபையினூடாக வீடுகளின் திருத்த வேலைக்கு வழங்கப்பட்ட நிதி 3 இலட்சம் ரூபாய், பற்சிகிச்சை முகாங்களுக்கான செலவீனம் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய்,

> **“பெருந்தோட்ட மக்கள் எதிர்நோக்கும் எந்தவொரு பிரச்சினையையும் நேரடியாகவோ அலைபேசி ஊடாகவோ அறிவிக்க முடியும். அத்தகைய அறிவிப்புகளையும் வேண்டுகோள்களையும் உடன் கவனத்தில் எடுத்து, தீர்வைப் பெற்றுக்கொடுப்பேன்**

பட்டப்படிப்பை மேற்கொள்ளும் வறிய மாணவர்களுக்கென அரசாங்கத்திலிருந்து பெற்றுக்கொடுக்கப்பட்ட உதவித்தொகை இரண்டு இலட்சத்து 37 ஆயிரத்து ஐநூறு ரூபாய், சொந்த நிதியிலிருந்து அனர்த்தம், விளையாட்டு போட்டிகள், ஆலய விழாக்கள் போன்றவற்றுக்கு வழங்கப்பட்ட தொகை 18 இலட்சத்து 8 ஆயிரத்து 200 ரூபாய், வீடமைப்பு கடன் மூன்று இலட்சம் ரூபாய், நோய்வாய்ப்பட்டவர்களுக்கான தனிப்பட்ட நிதியுதவிகள் எட்டு இலட்சத்து 51 ஆயிரத்து 930 ரூபாய், வறிய மாணவர்களுக்கான கற்றல் உதவிகள் இரண்டு இலட்சத்து 52 ஆயிரத்து 500 ரூபாய், நாடாளுமன்றப் பார்வைக்குச் சென்ற மாணவர்களுக்கான செலவீனம் 55 ஆயிரத்து 500 ரூபாய், காப்பகங்களுக்கு வழங்கப்பட்ட நிதி 12 இலட்சத்து 33 ஆயிரத்து 500 ரூபாய், கற்கைச் செயலமர்வுகளுக்கான செலவு 32 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய், பிராந்திய அபிவிருத்திக்கான உதவிகள் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாகும்.

இவ்வகையில், 64 கோடியே 49 இலட்சத்து 28 ஆயிரத்து 130 ரூபாய் (644.93 மில்லியன் ரூபாய்) செலவுகள் இடம்பெற்றிருக்கின்றன. மக்கள் நலன் சார்ந்த அனைத்து விடயத்திலும் கவனத்தைச் செலுத்தியுள்ளேன் என்பது இதனூடாக நிரூபணமாகின்றது.

> **“நடைபெறப் போகும் தேர்தலிலும், எமது மக்கள், மீளவும் என்னை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவார்களென்ற அபார நம்பிக்கை எனக்கிருக்கின்றது. எம் மக்கள் மீது, நான் வைத்திருக்கும் நம்பிக்கை, என்றும் அவநம்பிக்கையாக வீண்போகாது**

எனது காலப்பகுதியில் 63 இளைஞர், யுவதிகளுக்கு அரசதுறையில் தொழில் வாய்ப்புகள் பெற்றுக்கொடுத்துள்ளேன். இது போதுமானதாக இல்லாவிட்டாலும், பல்வேறு அரச திணைக்களங்களில் இவர்கள் புகுத்தப்பட்டுள்ளமை, இன்னுமொரு குறிப்பிடத்தக்க அம்சமாகவே கருதுகின்றேன். இதுவரையிலும் பெரும்பாலும் கல்வித் திணைக்களத்துக்குள் மாத்திரம் உள்வாங்கப்பட்ட எம்மவர்கள், இவ்வாறு பல்துறை அரச திணைக்களங்களுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளமையை இங்கு நினைவு கூர்கின்றேன்.

**கேள்வி: தங்களுக்குச் சவாலான வேட்பாளர் என யாரையாவது கருதுகின்றீர்களா?**

பதில்: எமது சமூகத்தின் பெறுமதிமிக்க வாக்குகளைச் சிதறடிப்பதற்கும் பெறுமதியற்றதாக்குவதற்கும் சிலர் கங்கணம் கட்டிச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இத்தகையவர்களுக்கு, தகுந்த பாடத்தை எம்மக்கள் புகட்ட வேண்டும். தான் வெற்றி பெறமாட்டேன் என்று தெரிந்திருந்தும் ஒப்பந்த அடிப்படையிலும் ஏஜென்டுகளாகவும் இருந்து செயற்படுவர்களை இனங்கண்டு, சமூகத்திலிருந்து அத்தகையவர்கள் ஓரங்கட்டப்படல் வேண்டும்.

**கேள்வி: இந்தத் தேர்தல் தொடர்பாக, விசேடமாக மக்களிடம் தெரிவிக்க வேண்டிய கருத்துகள் ஏதாவது உண்டா?**

பதில்: பெருந்தோட்ட மக்கள் எதிர்நோக்கும் எந்தவொரு பிரச்சினையையும் நேரடியாகவோ அல்லது, 24 மணி நேரமும் செயற்படும் எனது அலைபேசி ஊடாகவோ அறிவிக்க முடியும். அத்தகைய அறிவிப்புகளையும் வேண்டுகோள்களையும் உடன் கவனத்தில் எடுத்து, தீர்வைப் பெற்றுக்கொடுக்கத் துரித நடவடிக்கைகளை எடுப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன், என்னுடன் மேலும் ஒரு தமிழரை நாடாளுமன்றத்துக்கு எமது மக்கள் அனுப்புவார்களாய் இருந்தால், அது ஒரு சாதனையாக அமைவதுடன், பாரிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் மேற்கொள்ள முடியும்.

நடைபெறப்போகும் தேர்தலில், தொலைபேசிச் சின்னத்துக்கும் 1 மற்றும் 9 ஆகிய இலக்கங்களுக்கும் புள்ளடியிட்டு எம்மிருவரையும் தெரிவு செய்யும்படியும் அத்தோடு மூன்றாவது விருப்பு வாக்கு இலக்கத்தை பயன்படுத்த வேண்டாமென்றும் எமது மக்களிடம் உரிமையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.



பெருந்தோட்டப் பகுதிகளில் பாரிய பாலங்கள், குடிநீர் விநியோகத் திட்டங்கள், மலசல கூடங்கள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளையும் மேற்கொண்டிருந்தேன். உலக வங்கித் திட்டத்தின் கீழ், பெருந்தோட்டப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட வரலாற்று ரீதியிலான முதன்மைத் திட்டங்களே இவைகளாகும். இத்திட்டத்தின் மூலமாக, எட்டுக் கோடியே ஐம்பது இலட்ச ரூபாய் செலவு செய்யபட்டுள்ளது. இவ்வாறான திட்டங்கள், நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் என்ற நிலையை மாற்றி, தோட்டப்புறங்களுக்கும் அவற்றை விஸ்தரித்துள்ளேன்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 10 ஜூலை 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.